
சொ.கலைவாணி சொக்கலிங்கம்
தேனே..திரவியமே...

# தேனே..திரவியமே...

சூரியன் நடுவானில் நின்று கொண்டு வெப்பத்தை பொழிந்து கொண்டிருக்கும் மதியவேளை. சுற்றுப்புறம் எங்கும் வெயில் அனலாய் தகிக்க, முத்தையா கிணற்றடியில் நின்று கமலையில் நீர் இறைத்துக் கொண்டிருந்தார்.

திடகாத்திரமாய் உயரமாய் வளர்ந்திருந்த காங்கேயம் காளைகள் இரண்டும் கழுத்தில் கட்டியிருந்த வெண்கலமணிகள் 'ஜல்ஜல்' என சப்திக்க, முன்னும் பின்னுமாய் நடந்து கிணற்றிலிருந்த நீரை கூனை மூலம் வெளியே கொண்டு வர அதை வாய்க்காலில் சரித்து ஊற்றினார் முத்தையா.

தெளிந்த குளிர்ந்த நீர் வாய்க்கால் வழியாக ஓடி, மஞ்சள் நிற பூக்களோடு செழிப்பாய் கொத்தாய் நின்ற கடலைச் செடிக்கு பாய்ந்து கொண்டிருந்தது.

''ம்போ... ம்போ... ஹேய்'- என குரல் கொடுத்தவாறே காளைகளை ஒரே சீராய் நடக்க வைத்து மீண்டும் நீர் இறைக்க, குடுவை போலிருந்த கூனையில் கால் அளவே நீர் வந்தது.

''என்ன? கூனை நிறையலையே''- என்றவாறே கிணற்றை எட்டிப் பார்த்தார் முத்தையா.

உச்சி வெயில் கிணற்றுக்குள் விழ, மணலும் சிறு கற்பாறைகளுமாய் கிணறு வற்றிப் போயிருந்தது.

''ம்க்கும்! அதுக்குள்ள தண்ணி வத்திப் போச்சா? இன்னும் நாலு நடை எடுத்தா தண்ணி பாய்ச்சி முடிச்சிருக்கலாம். ஹூம்''- சலிப்போடு மாட்டின் கழுத்தில் கட்டியிருந்த நுகத்தடியுடன் இணைத்து கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து காளைகள் இரண்டையும் விடுவித்தார்.

''போங்கப்பா! போய் எதுனா மேய்ஞ்சிட்டு ஓய்வெடுங்க. தண்ணி ஊறட்டும்''- என அவற்றின் முதுகில் தட்டிக் கொடுக்க, எஜமானின் சொல்லுக்கு கட்டுப்பட்டு காளைகள் இரண்டும் வாய்க்கால் ஓரமாய் வளர்ந்திருந்த பசும்புற்களை மேயத்துவங்கின.

''ஸ்ஸ்....அப்பாடா...''- என்றவாறே கிணற்று மேட்டருகே நிழலைப் பரப்பி நின்று கொண்டிருந்த மஞ்சனத்து மரத்தடியில் அமர்ந்தார்.

வெயிலின் தாக்கத்தால் உடல் முழுவதும் வியர்வை வழிந்தோட தலையில் கட்டியிருந்த தலைப்பாகையை அவிழ்த்து வியர்வையை ஒற்றியெடுத்து துண்டை உதறி புல்தரையில் விரித்தார்.

விடிந்தது முதலே உழைத்துக் களைத்த உடம்பு ஓய்வைக் கேட்டு கெஞ்ச, துண்டு விரிப்பில் உடலை சாய்த்த நேரம் தூரமாய் மகளின் குரல் கேட்டது.

''யப்போவ்''

''ம்மா ஆஆ''- தனக்கு முன்பாய் குரல் கொடுத்த காளைகளை பெருமையாய் பார்த்து சிரித்தார் முத்தையா.

''உங்க அம்மா வந்திட்டாளாக்கும்? போங்க. போய் கூட்டியாங்க''- என்று கூறி விட்டு நிழலில் இளைப்பாற, காளைகள் கடலைச் செடிகளுக்கு நடுவே சென்ற ஒற்றையடிப் பாதையில் 'ஜல்ஜல்' என நடக்கத் துவங்கின.

''யப்போவ்''- இப்போது மகளின் குரல் இன்னும் பலமாய் ஒலிக்க, அடுத்த தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த ஆறுமுகம் உற்சாகமாய் நிமிர்ந்தான்.

''எப்போவ்! சாப்பாடு கொண்டாந்திருக்கேன்''- என்ற தேன்மொழியின் குரலில் உடல் முழுக்க உற்சாக வெள்ளம் கரைபுரண்டோட, தன் வேலையை நிறுத்தி விட்டு பார்வையை வெளியே வீசினான்.

வெளிப்பக்க படலையை திறந்து கொண்டு தோட்டத்திற்குள் நுழைந்த தேன்மொழியின் பார்வையும் அடுத்த தோட்டத்தில் பாய, அதற்காகவே காத்திருந்த ஆறுமுகம் பளிச்சென புன்னகைத்தான்.

சின்னதாய் உதட்டு சுழிப்போடு பார்வையை திருப்பிக் கொண்டு தன் தந்தையை தேடிக் கொண்டு துள்ளலாய் நடந்த தேன்மொழிக்கு இருபது வயது. மாநிறத்திற்கும் சற்று கூடுதலான நிறம்.

கன்றுக்குட்டியின் கண்களைப் போல் சற்று பெரிய கருவிழிகள். மஞ்சள் பூச்சோடு மின்னிய முகம் மாசு மருவற்று பளிங்காய் ஜொலித்தது. எப்போதும் புன்னகைத்த இதழ்கள்.

எண்ணெய் தேய்த்து இறுக பின்னலிட்ட ஜடை இடையைத் த

[illegible]

நீண்டிருந்தது. சுத்தமாய் துவைத்து உடுத்தியிருந்த பாவாடை தாவணி பளிச்சென்றிருந்தது.

மொத்தத்தில் அந்த பொட்டல்காட்டில் அவள் ஒரு தேவதை. கலக லப்பாய் சிறகடிக்கும் சிட்டுக்குருவி. தன் குடும்பத்தை கட்டிக் காப்ப தில் காவல் தெய்வம்.

இடுப்பில் சிறு மூங்கில் கூடையில் தந்தைக்கும் தன் மனம் கவர்ந்தவ னுக்கும் சேர்த்தே சாப்பாடை கொண்டு வந்தவள், எதிரே வந்த காளை களை கண்டதும் புருவம் தூக்கினாள்.

''என்னடா? நீங்க தண்ணி இறைக்கலையா?''

''ம்... மா... மா...''

''ஓ! தண்ணி வத்திப்போச்சா? சரி வாங்க. வெயில்ல அலையாம நிழல்ல படுங்க''- என்றவாறே அவற்றின் தாடையை மிருதுவாய் வருடி விட, அவளை விட உயரமாய் நின்ற காளைகள் கன்றுக்குட்டி யாய் அவளைத் தொடர்ந்தன.

தன் குழந்தைகளிடம் பேசுவதைப் போல் பேசிக் கொண்டே அவற்றை அழைத்து வந்து மரத்தடியில் தன் கூடையை இறக்கி வைத்து விட்டு, காளைகளை கயிற்றில் கட்டினாள்.

படுத்திருந்த முத்தையா எழுந்தமர்ந்தார். ''அட! எம்மா இன்னிக்கு இவ்வளவு நேரம்?''

''மீனு வரும்னு இருந்தேம்ப்பா. பனிரெண்டு மணி வரைக்கும் வரலை. அதான் நேரமாகிப் போச்சு''

''சின்னதுக எல்லாம் பள்ளிகொடத்துக்கு போயிருச்சுகளா?''

''அதெல்லாம் ஒன்பது மணிக்கே போயாச்சு. கை- கால் அலம்பிட்டு வாங்கப்பா''- என்றவாறே மரத்தடி நிழலில் அமர்ந்தாள் தேன்மொழி.

''நீ சாப்பிட்டியாம்மா?

''இல்லப்பா. இனிமேத்தான்''

''சரி. நீ எடுத்து வையும்மா. நான் ஆறுமுகம் பயலுக்கு ஒரு குரல்

*பல் வலி உடனே நீங்க பப்பாளிப் பழத்தை நறுக்கி வலி எடுக்கும் பல்லின் மீது படும்படி நன்றாக அதக்கி சாப்பிட்டால் பல்வலி மாயமாய் மறைந்து விடும்.*

*-எம்.எஸ்.கற்புலெட்சுமி, எடையூர்.*



கொடுத்திட்டு வந்திடுறேன்''- என்றவாறே முத்தையா எழ, ஆறுமுகத் தின் குரல் கேட்டது.

''இதோ வந்திட்டேன் மாமோய்''

இடுப்பில் கட்டிய லுங்கியோடு, மேல் துண்டால் கைகளை துடைத் துக் கொண்டே வந்தவனைக் கண்டதும் தேன்மொழியின் மனம் கும் மியடித்தது.

அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் வெருவாய் சலித்துக் கொண் டாள்

''ஹூம். வந்திட்டியா? உனக்கு மட்டும் எப்படித்தான் மூக்குல வேர்க் குதோ?''

''என்னம்மா நீ? பசியோடு வந்த புள்ளைகிட்ட இப்படியா பேசறது?''

''விடுங்க மாமா. சாப்பாட்டு விஷயத்தில நான் கூச்சப்பட மாட்டேன். தேனு என்னை அடிச்சே விரட்டினாலும் போக மாட்டேன்''

''க்கும். இப்படி பேசியே மதிய சாப்பாட்டை இங்கே ஒட்டிடு. கஞ்சப்பய''- என்றவாறே சாப்பாட்டு பாத்திரங்களை எடுத்து வெளியே பரப்பினாள் தேன்மொழி.

''தேனு! நீ அவனுக்கு சாப்பாடு போடு. நான் மாட்டுக்கு தண்ணி காட் டிட்டு வர்றேன்''

''சாப்பிட்டுட்டு காட்டலாம்ப்பா''

''இல்லம்மா. புள்ளைகளுக்கு தொண்டை காய்ஞ்சிருக்கும். இன் னிக்கு வெயிலு அதிகம். நீ எடுத்து வை. நான் வந்திடுறேன்''- என்ற முத்தையா காளைகளை அவிழ்த்துக் கொண்டு கழுநீர் தொட்டியை நோக்கிச் செல்ல, அவள் தோளில் இடித்தான் ஆறுமுகம்.

பதறித் திரும்பிய தேன்மொழி ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தாள்.

''இதோ பாரு! இந்தத் தொட்டு பேசுற வேலை எல்லாம் எங்கிட்ட வேண்டாம். பிச்சிடுவேன்''

''கோவிச்சுக்காதே தேனு. கட்டிக்க போறவன் தானே?''

''அதை நீ சொல்லக் கூடாது''

''வேற?''

''உன் அப்பன் ஆத்தாளை வந்து சொல்லச் சொல்லு''

''என்ன தேனு! எனக்கு நீ உனக்கு நான்னு ஊருக்கே தெரியுமே. இதுல...''- என்றவாறே நெருங்கியவனை விரட்டினாள்.

''இதோ பாருய்யா. சும்மா இந்த மாயப் பேச்செல்லாம் பேசிகிட்டு கிட்ட வராதே!''

''தேனு''

''என் அப்பாரு உம்மேலயும் எம்மேலயும் வெச்சிருக்கிற நம்பிக் கையை கெடுத்துப்புடாதே. எட்டி உட்காரு''

''ஆமா! இப்படியே என்னை விரட்டு''- சோர்ந்த முகத்தோடு நகர்ந்து உட்கார்ந்து கொண்டான் ஆறுமுகம்.

''அப்படித்தான் விரட்டுவேன். என் கழுத்தில மூணு முடிச்சு போடுற வரைக்கும் என் நிழலைக் கூட நீ தீண்டக் கூடாது''

''நானா மாட்டேங்கிறேன். நீதான் தள்ளி போட்டுகிட்டே போற. இப்பச் சொல்லு. நாளைக்கே ஊரைக் கூட்டி உன் கழுத்தில தாலி கட் டுறேன்''- என்றவனின் முகத்தில் இடித்தாள்.

''மூஞ்சியப்பாரு. என்ன அவசரம் உனக்கு. முதல்ல பூவு படிச்சி முடிக் கட்டும்''

''இப்படி சொல்லியே நாலு வருஷம் போயிடுச்சி''

''பொறுத்தது தான் பொறுத்த, இன்னும் நாலு வருஷம் பொறுத்துக்க ஆறுமுகம்''- பதமாய் சொன்னவளைக் கண்டு திகைத்துப் போனான்.

''என்ன? இன்னும் நாலு வருஷமா?''

''ம்''

''என்ன விளையாடுறியா?''

''ஏன்யா?''

''பின்னே? அதான் இந்த வருஷத்தோடு பூவு படிச்சி முடிச்சிடு மில்ல?''

''பனிரெண்டுதானே முடிக்கிறாள். டீச்சராக இன்னும் நாலு வருஷம் படிக்கணுமாமே''

''என்ன தேனு நீ? இப்படியே நாளைக் கடத்தினா எப்படி?''

''ஆறுமுகம்! பூவு பாவம்யா. டீச்சராகணும்னு சின்ன வயசுல இருந்தே கனவு கண்டுட்டு இருக்கா. அவ கனவை கலைக்கச் சொல்றியா?''

''நான் அப்படிச் சொல்லல. அவ பாட்டுக்குப் படிக்கட்டும். நாம கல் யாண பண்றதுல என்ன பிரச்சனை?''

''புரியாம பேசாதய்யா. நான் கண்ணாலம் கட்டிட்டு உன்கூட வந்திட்டா என் தம்பி தங்கைகளை யார் பார்த்துப்பா?''

''அதான் பூவு இருக்காளே?''



''ம்ப்ச்! அவ படிக்கப் போயிடுவாளே''

''போயிடுவாளா? எங்கே?''

''நம்ம ஊருல ஏது காலேசி? மதுரையில போய் தான் படிக்கணும்''- தேன்மொழி இயல்பாய் சொல்ல, முகம் மாறினான் ஆறுமுகம்.

''என்ன தேனு சொல்ற?''

''ஆமாய்யா. மதுரையில உள்ள காலேஜ்ல தான் பெரிய படிப்பு படிக்க ணுமாம். நாலு வருஷம் படிச்சா எப்படியும் டீச்சர் ஆயிடுவாளாம்''

''ஏன் தேனு? பெரிய படிப்புன்னா... நிறைய செலவாகுமே''

''ஆகத்தான் செய்யும்''

''பணத்துக்கு என்ன பண்ணுவ?''

''எப்படியாவது புரட்டணும். பூவோட டீச்சரும் உதவி பண்றேன்னு சொல்லியிருக்காகளாம்''

''ஏன் இப்படி அடுத்தவங்ககிட்ட கையேந்தணும்?''

''படிக்கிறதுக்காக பிச்சை கூட எடுக்கலாம் ஆறுமுகம் தப்பில்லை''

''அப்போ கடைசி வரைக்கும் உன் தங்கச்சி... தம்பின்னு ஒவ்வொருத் தரையா படிக்க வெச்சிட்டே இருக்கப் போறியா?''- ஆறுமுகத்தின் குரல் மாறியதும் வியப்பாய் அவனை ஏறிட்டாள்.

''ஆறுமுகம்?''

''என்னைப் பத்தி நினைக்கவே மாட்டியா?''

''இது என்ன கேள்வி ஆறுமுகம். நாளு பூரா உன்னைத் தானே நினைச்சி ட்டு இருக்கேன்''

''பொய்''

''ஆறுமுகம்?''

''என் நினைப்பு இருந்தா இப்படி கல்யாணத்தை தள்ளிப் போட்

''எதிரிவிட்ட அம்பினாலா அரசரின் தலைக்கிரீடம் தெறித்து விழுந்ததாம்?''

''இல்லை... தலை தெறிக்க ஒடிவந்த ஒட்ட த்தால் தான் விழுந்தது மகாராணி!''

**-ஆர்.ஆர்.உமா, திசையன் விளை**



'டுட்டே போலியா?''

''என்ன ஆறுமுகம்! கல்யாணம்தானே? அதை எப்பவேணா பண்ணிக்கலாம்''

''எப்போ? அறுபது வயசிலயா?''- கோபமாய் அவன் குரலை உயர்த்த, தேன்மொழி திகைத்தாள்.

''ஆ...று.. முகம்?''

''இதோ பார் தேனு! நான் உன் தங்கையை படிக்க வேணாம்னு சொல்லல. ஆனா நம்ம கல்யாணம் சீக்கிரமா நடக்கணும்னுதான் சொல்றேன்''

''நான் தான் சொல்றேனில்ல. நான் வந்திட்டா தம்பி தங்கையெல்லாம்...''

விசுக்கென எழுந்தான் ஆறுமுகம். ''இப்படியே காலம் தள்ளிட்டு இரு. கடைசி வரைக்கும் நமக்கு கல்யாணமே ஆகப்போறதில்ல''

''ஆறு...முகம்... இப்ப ஏன் கோபப்படுற?''

''என்னால வேற என்ன செய்ய முடியும்?''- பட்டென கேட்டு விட்டு அவன் விறுவிறுவென வெளியேற, தேன்மொழியின் கண்கள் நீரைச் சொரியத் துவங்கின.

## 2

''திகுதிகு''வென விறகு எரிய அடுப்பிலிருந்த உலை கொதிக்கத் துவங்கியது. செந்நிறமாய் எரிந்து கொண்டிருந்த ஜுவாலைகளையே வெறித்துக் கொண்டிருந்த தேன்மொழியின் கண்கள் கலங்கியிருந்தன.

மதியம் தொடங்கிய கண்கள் இரவான பின்பும் தன் பணியை நிறுத்தாமல் கசிந்து கொண்டே இருக்க, தந்தையிடம், உடன் பிறந்தவர்களிடம் அதை மறைப்பதற்குள் பெரும்பாடு பட்டுப் போனாள்.

ஒரு வழியாய் அனைவருக்கும் காபி கொடுத்து படிக்க உட்கார வைத்து விட்டு, அடுக்களைக்குள் நுழைந்தவளது மனம் மீண்டும் ஆறுமுகத்திடமே சென்றது.

சிறு வயது முதலே பார்த்து பழகியவன். சமீப காலமாக உயிராய்



பித்தளை வெண்கலச் சாமான்கள், எவர்சில்வர் காஸ் அடுப்புகள், பீங்கான் சாமான்கள் செராமிக் டைல்ஸ் ஆகிய பொருட்களை வினிகர் கலந்த வெந்நீரில் கழுவினால் அவை பளபளப்பாகிவிடும். எப்பொழுதுமே வினிகரை போட்டவுடன் கழுவி விடுங்கள். அப்படியே ஊற வைக்கக் கூடாது.

-வே.சித்ரா வேடியப்பன், திருவண்ணாமலை.

நேசிக்கத் துவங்கியவன். இன்று வரை ஒரு நாள் கூட அதிர்ந்து பேசியதில்லை. கோபம் கொண்டதில்லை.

ஆனால் இன்று... தன் மீதுள்ள கோபத்தில் சாப்பிடாமல் போய் விட்டானே! கண்கள் தானாய் மதியம் கொண்டு சென்ற சாப்பாட்டு கூடையை பார்த்தது.

அவனது பங்கு சாப்பாடு அப்படியே இருந்தது. ஏன் ஆறுமுகம் போகிறான்? எனக்கேட்ட தந்தையிடம் ஏதேதோ சொல்லி சமாளித்தாலும் மனம் ஆறுமுகத்தை எண்ணியே தவித்தது.

பசிதாங்க மாட்டானே! வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டு வரமாட்டான் என்பதை அறிந்து அவனுக்கும் சேர்த்தே சமைத்து எடுத்துப் போவது வழக்கம்.

தந்தையை அழைப்பதையே குறிப்பாய் உணர்ந்து ஓடி வந்து விடுவான். அவன் வயிறார சாப்பிடுவதை கண்டு மனமும் வயிறும் நிறைந்து போகும் தேன்மொழிக்கு.

ஆனால் இன்று? அப்படியென்ன கோபம் அவனுக்கு? உதடு பிதுங்கி மீண்டும் அழுகை பீறிட, பின்னால் அரவம் கேட்டு, தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு திரும்பினாள்.

கையில் பரீட்சை தாள்களோடு நின்று கொண்டிருந்தாள் மூத்த தங்கை பூங்குழலி. கனமான இரட்டை சடை பின்னலோடு பாவாடை சட்டையில் நின்ற தங்கையை பார்த்து புன்னகைத்தாள்.

''என்ன பூவு?''

''அக்கா! பரீட்சை பேப்பர் தந்திட்டாங்க''

''அப்படியா? சோறு வெந்திடுச்சு. வடிச்சிட்டு வர்றேன்''

''அக்கா''

''ம்?''
''ரெக்கார்ட் நோட்டுக்கு நான் மட்டும் தான் காசு கொடுக்கலை. நேத்தே கேட்டேனே''
''அச்சச்சோ! நான் தான் மறந்திட்டேன். எத்தினி ரூபா?''
''நூத்தி இருபது ரூபா''
''நூத்தி இருபதா?''- யோசனையாய் அலமாரியில் இருந்து மிளகு, சீரகம் போட்டு வைத்திருந்த சிறு சிறு டப்பாக்களை துழாவினாள். ஐந்தும் பத்துமாய் இருந்த நோட்டுக்களை எடுத்து தங்கையிடம் நீட்டினாள்.
''எவ்வளவு இருக்கு பாரு?''
கசங்கியிருந்த நோட்டுகளை மெதுவாய் பிரித்து நீவி விட்டு எண்ணினாள் பூங்கோதை.
''அக்கா! எண்பது ரூபாதான் இருக்கு''
''அப்படியா? இன்னும் நாற்பது ரூபா வேணுமா?''
''ஆமா''
''சரி! நீ போய் படி. நான் அப்பா வந்ததும் கேட்டுப் பார்க்கிறேன்''
''சந்தைக்கு போயிட்டு அப்பா என்னிக்கு மிச்சகாசு கொண்டு வந்தது?''
''முதல்ல அப்பா வரட்டும். நீ போய் படி''
''சரிக்கா''- பூங்குழலி தலையாட்டி விட்டு வெளியேற, சாதம் வெந்து விட்டதா என பதம் பார்த்து வடிக்கத் துவங்கினாள்.
மனம் அவசரமாய் சிந்தித்தது. இன்னும் நாற்பது ரூபாய்க்கு என்ன செய்வது?
''அக்கா! அப்பா வந்தாச்சு''- சின்னவனின் உற்சாக குரலில் சோற்றுப் பானையை நிமிர்த்தி விட்டு, மதியம் வைத்திருந்த குழம்பை அடுப்பில் வைத்து விட்டு வெளியே வந்தாள்.
கையில் ஒற்றைப் பையோடும் சன்னமான பொருள்களோடும் வந்தவரை கண்டு நெற்றியை சுருக்கினாள்.
''என்னப்பா! ஒரு பை தான் கொண்டு வர்றீங்க. அரிசி வாங்கலை?''
''இல்லம்மா. சந்தையில நிக்கும்போது நம்ம பொன்னம்மா அத்தைய பார்த்தேன். பேரனைக்கூட்டிட்டு ஆஸ்பத்திரிக்கு போனாங்களாம். புள்ளைக்கு காய்ச்சலாம்.
கொண்டு வந்த காசு ஆஸ்பத்திரிக்கே சரியாப் போச்சு போலிருக்கு. ஒரு



நூறு ரூபா இருந்தா கொடுண்ணே சாமான் வாங்கணும்னு கேட்டா''
''உடனே கொடுத்திட்டீங்க?''
''பாவம்மா! அவசரத்துக்கு நாம கூட உதவல்லனா எப்படி?''
''அப்போ அரிசி?''
''நாளைக்கு சோத்துக்கு இருக்கில்ல?''
''இருக்கு''
''அத்தே காலங்கார்த்தால துட்டோட வந்திடுவா. நான் சாயந்திரம் அரிசி வாங்கிட்டு வந்திடுறேன்''
''சரி மிச்ச பணம்?''
''ம்... இருக்கு. அறுபது ரூபா''- என இடுப்பு மடிப்பில் முடிந்து வைத்திருந்த பணத்தை முத்தையா எடுக்க, ஆவலாய் வாங்கினாள் தேன்மொழி.
''நல்லதாப் போச்சு''- என்றவாறு நான்கு பத்து ரூபாய் தாள்களை எண்ணி பூங்குழலியிடம் நீட்டினாள்.
''பூவு! இந்தா! நாளைக்கு நோட்டுக்கு கொடுத்திடு''
''சரிக்கா''
''காசு பத்திரம்டி''
''சரிக்கா''
''ஏம்மா! அப்போ அரிசிக்கு?''
''அதை நாளைக்கு பார்த்துக்கலாம்ப்பா. இப்போ சோறு போடவா?''
''நேரமாகட்டும்மா. நான் கோபால் வீடு வரைக்கும் போயிட்டு வர்றேன்''
''நேரம் காலம் தெரியாம பேசிட்டு இருக்காம சீக்கிரமா வந்திடுங்க''
''வந்திடுறேன் வந்திடுறேன்''- என்றவாறே முத்தையா தெருவில்



''நீச்சல் உடை தயாரிக்க நம்ம முதலாளிக்கு சேல்ஸ் இல்லாம கெப்பட்டடனாம்!''
''இப்ப என்ன செய்யறாரு?''
''எதிர் நீச்சல் பழகுறாரு!''
**-ஆர்.ஜி.கலியாணி, திருநெல்வேலி**

இறங்கி நடக்க, வீட்டிற்குள் நுழைந்தாள் தேன்மொழி.

"க்ளிங்"- சைக்கிள் மணியோசை ஒலிக்க மனம் படபடத்தது. தினமும் ஒலிக்கும் ஓசைதான். ஆறுமுகத்தின் சைக்கிள் தங்கள் வீட்டை கடக்கையில் அவன் எழுப்பும் சங்கேத மொழி.

ஆர்வமாய் வாசலுக்கு திரும்ப முயன்றவள் மதியம் நடந்த நிகழ்வுகள் நினைவுக்கு வர, மவுனமாய் அடுக்களைக்குள் நுழைந்தாள்.

"க்ளிங்! க்ளிங்"- மீண்டும் ஒலியெழுப்ப அழுத்தமாய் அமர்ந்து கொண்டாள் தேன்மொழி.

"நான் ஏன் போக வேண்டும்?"- வீம்பாய் நினைத்த நேரம் கடைக் குட்டி முருகன் ஓடி வந்தான்.

"அக்கா! ஆறுமுகம் மாமா வந்திருக்கு"

"அக்கா வேலையா இருக்கேன்னு சொல்லு"

"சரி"- அவன் போன மறு நிமிடம் பூங்குழலி வந்தாள்.

"அக்கா! மாமா கூப்பிடுது. வா"

"போகச் சொல்லு. எனக்கு வேலையிருக்கு"

"அதான் சோறு வடிச்சிட்டியே. போக்கா. திரும்பத் திரும்ப பெல் அடிச்சிட்டே இருந்தா அக்கம் பக்கம் உள்ளவங்க பார்க்க மாட்டாங்களா?"

"பூவு... நான்..."

"போக்கா. அடுப்பை நான் பார்த்துக்கிறேன்"- பூங்குழலி விரட்ட, கடுப்பாய் வெளியே வந்தாள் தேன்மொழி.

சைக்கிளை விட்டு இறங்காமலே நின்ற ஆறுமுகம் தேன்மொழியை கண்டதும் புன்னகைத்தான். முகத்தை திருப்பிக் கொண்டே கேட்டாள்.

"என்ன விஷயம்?"

"என்ன தேனு. கோபமா?"

"இதைக் கேட்கத்தான் கூப்பிட்டியா?"

"மன்னிச்சிடு தேனு. நான்... உன்கிட்டே கோவிச்சிருக்கக் கூடாது"

தேன்மொழியின் கண்கள் கலங்கி விட மவுனமாய் நின்றாள். அடுத்த வீட்டு வயதான தம்பதிகள் திண்ணையில் அமர்ந்திருக்க, மெல்லிய குரலில் அழைத்தான்.

"தேனு"

"ம்"



" உன்கிட்ட நிறைய பேசணும். அம்மன் கோவிலுக்கு வர்றியா?"

" எனக்கு வேலையிருக்கு."

" என்ன தேனு? நீயே இப்படி கோவிச்சுக்கிட்டா எப்படி?"

" ஏன் நீங்க தான் கோபப்படணும்னு ஏதாவது சட்டம் இருக்குதா?"

" ஷ் ஏன் சத்தம் போடுறே? புள்ளைங்க படிக்குதில்ல?"

" ஹூம் ரொம்பத்தான் அக்கறை"

" எனக்கு எப்பவுமே உம்மேலயும், நம்ம குடும்பத்து மேலயும் அக்கறை இருக்கு தேனு"

" ம் உன் அக்கறையைத் தான் பார்த்தேனே"

" அதான் மன்னிச்சுடுன்னு சொன்னேனே"

" உன்னை மன்னிக்க நான் யாரு?" முகத்தை திருப்பிக் கொண்டவளைப் பார்த்து மனம் கசிந்தான்.

" நான் கோவில் வாசலில் நிற்பேன். பத்து நிமிஷத்தில் நீ வரணும்"

" முடியாது "

" வந்தே ஆகணும். இல்ல உன் வீட்டுக்குள்ள நான் வந்திடுவேன் ஜாக்கிரதை" என்றவாறு சைக்கிளை மிதித்துக் கொண்டு புறப்பட்டான் ஆறுமுகம்.

கோபமாய்பற்களை கடித்தவாறு மறுப்பாய் குரல் கொடுப்பதற்குள் தெருமுனையை தாண்டிப்போயிருந்தான்.

## 3

பாந்து விரிந்திருந்த ஆலமரம் தன் விழுதுகளை பழுத்த துண்டுகளாய் தரையில் ஊன்றியிருக்க அதன் நடுவே அமைந்திருந்தது அந்த சிறிய ஊர்காத்த அம்மன் கோவில்!

கோவிலுக்கு வெளியே இருந்த சிமெண்ட் மேடை மீது அமர்ந்திருந்தான் ஆறுமுகம். கோவில் வாசலில் ஒற்றை குழல்விளக்கு மட்டுமே எரிந்து கொண்டிருக்க ஆள் நடமாட்டம் இன்றி அமைதியாய் இருந்தது.

வீசும் காற்றில் சலசலக்கும் ஆலமரத்துக் கிளைகளை தவிர வெகு அமைதி.

ஆறுமுகம் தவிப்பாய் காத்திருக்க, சற்று நேரம் கழித்தே வந்து சேர்ந்தாள் தேன்மொழி.

" வா தேனு இப்படி உட்கார்"

" நான் ஒன்னும் உட்கார்ந்து பேச வரலே"

" அட உட்காருடி" என உரிமையாய் அவளது கரம் பற்றி தன் அருகே அமர வைத்துக் கொண்டான். கோபமாய் எழ முயன்றவளை மீண்டும் அழுத்தமாய் அமர வைத்தான்.

" மன்னிச்சிடு தேனு. நான் கோபப்பட்டது தப்பு தான். அதுக்காக இப்படி மூஞ்சியை திருப்பினா எப்படி?"

" ம்... கோபம் வரத்தான் செய்யும். எப்படி விரட்டினாலும் இவ நம்ம காலைத்தான் சுத்தி வருவாங்கிற திமிர்" என்றவளின் வாயை மூடினான்.

" என்ன தேனு? பெரிய வார்த்தையெல்லாம் பேசுறே?"

" பின்னே?? ஒரு வாய் சோறு கூட சாப்பிடாமல் போனியே. எம்மனசு என்ன பாடுபட்டிருக்கும்? "

"நான் என்ன பண்றது தேனு? நீயும் என் நிலைமையை புரிஞ்சுக்க மாட்டேங்கிற. என் வீட்லயும் யாரும் புரிஞ்சிக்க போறதில்ல" கனத்த மனதுடன் சொன்னவனின் பக்கமாய் மெல்ல திரும்பினாள் தேன்மொழி.

வழக்கமாய் புன்னகையை மட்டுமே சிந்துகின்ற அவன் முகம் இன்று பெரும் குழப்பத்திலும், வேதனையிலும் இருந்தது. சட்டென கோபம் விலகிவிட, கனிவாய் நோக்கினாள்.

" என்னய்யா சொல்றே?"

" ஆமா நீயும் இன்னிக்கு நாளைக்குன்னு நாளைக் கடத்திட்டே போறே"

" ஏன்யா எனக்கு மட்டும் உன்னைக் கட்டிக்கணும்னு ஆசையில்லையா? முதல்ல பூவு படிப்பு முடியட்டும். "

" அவ படிக்கட்டும். ஆனா நம்ம கல்யாணமும் உடனே நடக்கணும்"

" ஏன் இப்படி சொன்னதையே சொல்லிட்டு இருக்க. என் நிலைமையை புரிஞ்சுக்கவே மாட்டியா?"

" நீ தான் தேனு புரிஞ்சுக்கவே மாட்டேங்கிறே"



" என்ன? " புருவம் உயர்த்திக் கேட்டவளைக் கண்டு ஒரு பெருமூச்சுடன் தலையசைத்தான்.

" உன்கிட்ட சொல்ல வேண்டாம்னு தான் இருந்தேன். ப்ச்! சொல்லித் தான் ஆகணும்."

" என்ன ஆறுமுகம் புதிர் போடுறே"

" தேனு "

" ம்?"

"எனக்கு எங்க வீட்ல கல்யாணம் பேசுறாங்க தேனு" தயக்கமும் கலக்கமுமாய் சொன்னவனைத் திகைப்பாய் ஏறிட்டாள்.

" ஆறுமுகம்..."

" பத்து நாளா வீட்ல ஒரே சண்டை"

" எதுக்கு?"

" சின்னம்மாவோட தம்பி மகளை நான் கட்டிக்கணுமாம். அவதான் கடைசிவரைக்கும் கஞ்சி ஊத்துவாளாம். அப்படி இப்படின்னு தினம் ஒரு பிரச்சனை.

என்னால வீட்ல நிம்மதியா இருக்கவே முடியல்ல. சரி! இன்னும் ஒரு ரெண்டு மாசந்தானேன்னு பல்லைக் கடிச்சிட்டு பொறுத்திருக்கேன். நீ என்னன்னா இன்னும் நாலு வருஷம் காத்திருக்க சொல்றியே

உனக்காக வாழ்நாள் முழுக்க காத்திட்டு இருக்க நான் தயார். ஆனா வீட்ல உள்ளவங்களை சமாளிக்க முடியலேயே தேனு" ஆறுமுகம் கலங்கிய குரலில் சொல்ல தேன்மொழியின் விழிகள் நீரால் நிறைந்தது.

அவளது கண்ணீரை கண்டு பதறினான் ஆறுமுகம்.

" தேனு இப்ப ஏன் அழுறே?"

" ஆ...று...மு...க...ம்"

"உன்மனைவிக்கு உன்னோட தங்கச்சிக்கும் சண்டை வந்தப்ப நீ என்ன செஞ்சே?"

"என்மனைவியோட தங்கச்சிகிட்டே பேசிக்கிட்டிருந்தேன்!"

-ஆர்.ஜி.அம்பிகை ராமன்,திசையன் விளை



" என்னம்மா?"
" நீ உன் சின்னம்மா பார்க்கிற பொண்ணை கட்டிப்பியா?"
கண்ணீர் சிதறலுடன் கேட்டவளைத் தன் தோளில் சாய்த்துக் கொண்டான்.
" சேச்சே! என்ன கேட்கிறே நீ?"
" இல்ல உன் சின்னம்மாவைப் பத்தி தான் எல்லாருக்குமே தெரியுமே. அது நினைச்ச காரியத்தை முடிக்காம விடாதே"
" என்னைப்பத்தியும் உனக்குத் தெரியுமில்ல?"
"ம்..."
"இதோ பார் தேனு! யார் என்ன சொன்னாலும் இந்த ஜென்மத்திலே நீ தான் எம்பொஞ்சாதி" என்றவனை சிறுகேவலுடன் கட்டிக்கொண்டாள் தேன்மொழி.
பரிவோடு அவளை அணைத்துக் கொண்டான். அவளது கண்ணீரை துடைத்தான்.
" அழாதேம்மா. சங்கடமா இருக்கு "
" ஆறுமுகம் "
" சொல்லு கண்ணு"
" எனக்கும் உன்னைக் கட்டிக்கணும். உன் கூடவே இருக்கணும்னு மனசு பூரா ஆசை இருக்கு. ஆனா ஆனா "
" என்னம்மா?"
" புள்ளைங்கள அப்படியே விட்டுட்டு வர முடியலை. தாயில்லாத புள்ளைங்க. நானும் வந்திட்டா திண்டாடிப்போயிடுமே"
" ஏன் தேனு? நான் என்ன உன்னை அசலூருக்கா கூட்டிட்டுப்போகப் போறேன்? இரண்டு தெரு தாண்டினா என் வூடு இருக்கு"
" அதுக்கில்ல "
" தினமும் காலையிலயும், சாயந்திரமும் போய் புள்ளைகள பார்த்துக்கோ. நான் என்ன வேண்டாம்னா சொல்லப்போறேன்?"
" அதுக்கில்ல ஆறுமுகம். ஏற்கனவே தோட்டத்தின் பேர்ல மச்சிலூட்டுக்காரிகிட்ட கடன் வாங்கியிருக்கோம். இப்ப பூவோட படிப்புக்கும் அவர்கிட்ட தான் கேட்டிருக்கு "
" மேல மேல கடன் வாங்க வேண்டாம் தேனு. ஏற்கனவே அவன் இப்படி கடன் கொடுத்து தான் நம்மூர்க்காரங்க சொத்தையெல்லாம் பிடுங்கிட்டு இருக்கான். "



" தெரியுது. ஆனா அவசரத்துக்கு வசதியாப்போச்சு"
" இப்ப அது இல்ல பிரச்சனை. இந்தக் கடனையெல்லாம் அடைக்கிற வரைக்கும் நானும் காடுகரைக்கு வேலைக்குப் போயாகணும்."
" போ நம்ம வீட்ல இருந்தே போ. சம்பளத்தை மாமாகிட்ட கொடுத்திடு"
" விளையாடாதே ஆறுமுகம்"
" என்ன?"
" உன் வீட்டு சாப்பாட்டை சாப்பிட்டு என் சம்பளத்தை அப்பாகிட்ட கொடுத்தா உன் சின்னம்மா சும்மா இருக்குமா? பேயாட்டம் ஆடிப்புடாது?"
" அதெல்லாம் பார்த்தா முடியுமா? நீ என் பொஞ்சாதி. உன்னை அடக்கவோ அதட்டவோ அதுக்கு எந்த உரிமையும் கிடையாது. "
" அப்படியெல்லாம் சொல்லாதே. ஆயிரம் இருந்தாலும் அது உன் ஆத்தா"
" எங்க அப்பனை கட்டினவ எல்லாம் எனக்கு ஆத்தாவாக முடியாது" கசப்பாய் சொன்னான் ஆறுமுகம்.
" சரிசரி நாம வேற பேசலாம். இப்ப என்ன செய்றது ஆறுமுகம்?"
" நான் சொன்ன மாதிரி செய்றியா?"
" ம்.."
" பூவுக்கு எப்போ பரீட்சை வருது?"
" இன்னும் ரெண்டு மாசம் இருக்கு"
" வர்ற பங்குனியில பரீட்சை முடிஞ்சிடுமில்ல?"
" ஆமா "
" அப்போ சித்திரை பொறந்ததும் நம்ம கல்யாணம் நடக்கணும்"
" என்ன? " திகைப்பாய் கேட்டாள்.
" ஆமா நடந்தே ஆகணும்"

உருளைக்கிழங்கு வேக வைத்த தண்ணீருடன் சிறிது வினிகரை கலந்து பூஜைக்கான பித்தளைச் சாமான்களை அழுத்தித் தேய்த்தால் அவை நன்கு பளிச்சிடும்.

-வே.சித்ரா வேடியப்பன், திருவண்ணாமலை.

" அப்போ பூவோட மேல்படிப்பு?"
" அது என் பொறுப்பு "
" எப்படி எப்படி ஆறுமுகம்?"
" இனிமே உங்குடும்பத்துக்கும் சேர்த்து உழைக்குறேன் தேனு. அதுவும் என் கடமைதானே?"
" கேட்கிறதுக்கு நல்லா இருக்கு. ஆனா இது சரிவருமா?"
" ஏன் வராது?"
" நீயே கூலிக்கு மாரடிக்கிறே. சம்பள பணத்துல ஒத்தை ரூபா குறைஞ்சாலும் உன் வீட்டுக்கூத்து தெருவரைக்கும் கேட்கும். இதுல நீ எப்படி எங்க குடும்பத்தையும் கட்டியிழுப்ப?"
" உனக்காக என்ன வேணும்னாலும் செய்வேன் தேனு" என்றவனைக் காண்கையில் நெஞ்சம் விம்மியது.
அந்த கணத்தில் வேறு எதுவும் வேண்டாம். இவன் மட்டுமே போதும் என்றது மனசு. ஆனால் மறுகணமே தங்கையின் முகம் நினைவிலாடியது.
" எப்படியும் ஆயிரத்துக்கு மேலே மார்க் எடுத்துருவேன்கா. காலேஜ்ல ஈசியா சீட் கிடைச்சிடும். பி.எஸ்ஸி. மூணு வருஷம், பி.எட் ஒரு வருஷம். மொத்தம் நாலு வருஷம் தான்.
அப்புறம் நான் டீச்சராகிடுவேன். நம்ம ஊர் ஸ்கூல்லயே வேலைக்கு சேர்ந்திடணும். அப்புறம் உனக்கு ஊரே வாயைப் பிளக்குற மாதிரி கல்யாணம் பண்ணி வைப்பேன்.
தம்பி, தங்கச்சியை எல்லாம் நானே படிக்க வெச்சு பெரிய ஆளாக்கிடுவேன். அப்பாவுக்கு ஒரு பம்புசெட் வெச்சுக் கொடுத்துடுவேன்.
நம்ம கஷ்டமெல்லாம் போயிடும். அப்புறம் நாமளும் ஒரு மச்சுவீடு கட்டி சும்மா ஜாம்ஜாம்னு வாழலாம்."
ஒவ்வொரு முறையும் படிப்பு செலவுக்கு பணம் புரட்ட சிரமப்படும் போதெல்லாம் பூங்குழலி சொல்லும் வார்த்தைகள் இது.
அவள் சொல்வதைக் கேட்கும்போதெல்லாம் இனிமையாகத்தான் இருக்கும். ஆனால் தன் வாழ்க்கை மட்டும் போதும் என்று இவனுடன் போய்விட்டால் தன் தங்கையின் கனவு.. குழந்தைகளின் எதிர்காலம்?
" என்ன தேனு எதுவும் பேச மாட்டேங்கிற?", ஆறுமுகம் கேட்டதும் திடுக்கிட்டாள்.



" ம் இல்ல சும்மா ஏதோ நினைவு"
" இவன் எப்படி நம்ம தங்கையை படிக்க வைக்கப் போறான்னு யோசிக்கிறியா?"
" எனக்கு உம்மேல நம்பிக்கை இருக்கு ஆறுமுகம்."
" தேனு " ஆறுமுகத்தின் முகம் மலர்ந்தது.
" ஆனா உன் சின்னம்மா மேல நம்பிக்கை இல்ல" என்றதும் அவன் முகம் மாறியது. புன்னகையோடு அவனது முகம் பற்றி நிமிர்த்தினாள் தேன்மொழி.
" வருத்தப்படாதே ஆறுமுகம். எத்தனை ஜென்மம் எடுத்தாலும் நீ தான் என் புருஷன். இதுல எந்த மாற்றமும் இல்ல"
" தேனு"
" முதல்ல பூவு பரீட்சை எழுதி பாஸாகட்டும். அதுக்குள்ள எப்படியாவது கடனை அடைச்சிடுவோம். மத்ததை பிறகு பார்க்கலாம்."
" பிறகுன்னா எப்போ?"
" நானே சொல்றேன். நீ அதுக்கு முன்னால உன் அப்பாகிட்ட பேசி உன் சின்னம்மாவை சமாளிக்கப்பாரு"
" அப்பாவா அவர் எப்போ நிதானத்தில் இருந்தாரு? பேசி எத்தினி நாளாச்சு தெரியுமா?"
" பேசு ஆறுமுகம். பெரியவங்க சம்மதத்தோட தான் நம்ம கல்யாணம் நடக்கணும். "
" அதான் மாமா சம்மதிச்சிட்டாரே"
" எங்க அப்பா சம்மதிச்சா மட்டும் போதுமா?"
" போதாதாக்கும்?"
" போதாது. நான் வந்து வாழப்போறது உன் வீட்ல. அங்க எல்லோரும்



"நம்ம கபாலி இப்போ பெரிய சொத்து புரோக்கர் ஆயிட்டானாம் சார்!"
"நமக்குள்ள மாமூல் வந்துடுமில்லே?"
"இல்ல சார்! பந்தோபஸ்து போட்டா கமிஷன் தருவானாம்!"
-ஆர்.ஜி.கலியாணி, திருநெல்வேலி

என்னை முழு மனசா ஏத்துக்கணும்"
" இதெல்லாம் நடக்கிற காரியமா?"
" நடக்க வெக்கணும். அது உன் வேலை. நீ உன் வீட்டை சமாளி. நான் என் பிரச்சனைகளை சமாளிக்கிறேன். "
" எப்படி முடியும் தேனு?"
" முடியும் இன்னும் மூணு, நாலு மாசம் இருக்குல்ல. அதுக்குள்ள எப்படியும் சமாளிச்சிடலாம். " என்றாள் நம்பிக்கையாய்.
" அப்போ நம்ம கல்யாணம். "
" நிச்சயமாய் நடக்கும். சரி நான் கிளம்பட்டுமா?"
" இரேன் என்ன அவசரம்?"
" அப்பா வந்திருக்கும் ஆறுமுகம். நாம இப்படியெல்லாம் பேசறது தெரிஞ்சா வருத்தப்படும். நான் போறேன். "
" ஒரு நிமிஷம் தேனு"
" என்ன?"
" இந்தா " என்றவாறே சட்டைக்குள் கைவிட்டு அதை எடுத்தான். தேன்மொழியின் விழிகள் விரிந்தன.
வாழையிலையில் சுற்றப்பட்டிருந்த மல்லிகை சரத்தை அவளிடம் நீட்டினான் ஆறுமுகம். புன்னகை நெளியக் கேட்டாள்.
" என்ன இது?"
" மல்லிகைப்பூ உனக்குத்தான் "
" நான் கேட்கவே இல்லையே?"
" சந்தைக்குப் போனேன். உன் நினைப்பு வந்தது அதான் வாங்கிட்டு "
" ஓஹோ சமாதானப்படுத்த வாங்கிட்டு வந்திங்களாக்கும்?"
" ஆமா பொண்டாட்டியை சமாதானப்படுத்த என் அண்ணன் இப்படித்தானே வாங்கிட்டுப் போவான்"
" நான் என்ன உன் பொண்டாட்டியா?"
" ஆமா "

*புதினா சாறு, தேன், எலுமிச்சை சாறு மூன்றையும் சம அளவு கலந்து குடிக்க, அஜீரணம் உடனே குணமாகும்.*
*-பி.தேவி, தஞ்சை.*




" என்ன?"
" தாலி கட்டினாலும் கட்டாட்டினாலும் நீ என் பொண்டாட்டித்தான். என் ஆயுசு முழுக்க " கனிந்த குரலில் சொன்னவனை நெஞ்சம் நெகிழ பார்த்தாள் தேன்மொழி.
கண்கள் பனிக்க அவன் நீட்டிய மல்லிகையை வாங்கிக் கொண்ட போது, இந்த பிறவியில் இவன் மட்டுமே தன் வாழ்க்கைத்துணை என அவளது மனம் உறுதி எடுத்துக் கொண்டது.

## 4

வீட்டிற்குள் நுழையும் போதே சிந்தாமணியின் குரல் பலத்த எதிரொலிப்புடன் செவியில் மோதியது. மவுனமாய் செருப்பை கழற்றி விட்டு வீட்டுக்குள் நுழைந்தான் ஆறுமுகம்.
" சிமையில இல்லாத துரை அப்படி என்னத்தத்தான் கழட்டிட்டு இருக்கானோ இன்னிக்கு சந்தை நாளாச்சே சாமான் வாங்கிட்டு நேரத்துக்கு வீட்டுக்கு வரணும்னு தோணுதா?
எப்படி வீட்டு நினைப்பு வரும். அப்பனுக்கு தப்பாம பொறந்திருக்கே. இந்த வீட்டுல வந்து வாக்கப்பட்டு சீரழியுறதுக்கு ஏதாவது மொட்டைக் கிணத்துல விழுந்திருக்கலாம்"
வழக்கமாய் கேட்கும் அர்ச்சனைகள் தான் என்பதால் முகத்தில் எந்த மாற்றத்தையும் காட்டாமல் சட்டையை கழற்றி விட்டு கிணற்றடியை நோக்கிச் சென்றவன் அப்போது தான் சிந்தாமணியின் கண்ணில் பட்டான்.
கையிலிருந்த துடைப்பத்தை தூரமாய் தூக்கிப் போட்டு விட்டு இடுப்பில் கை வைத்துக் கொண்டு முறைத்தாள்.
" என்ன துரை இப்பத்தான் வீட்டுக்கு வர வழி தெரிஞ்சதா?"
காதுகேளாதவன் போல் கிணற்றை நெருங்கி கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த இரும்பு வாளியை கயிற்றின் உதவியோடு கிணற்றுக்குள் அனுப்பி நீரை இறைத்து வெளியே எடுக்க சிந்தாமணியின் குரல் இன்னமும் உயர்ந்தது.

'' நான் ஒருத்தி கேட்பது காதில் விழுதா இல்லையா?''
அதற்கும் பதிலின்றி போகவே அறை மூலையில் அமர்ந்து போதையில் மிதந்து கொண்டிருந்த கைலாசத்தை நெருங்கினாள்.
'' பாருய்யா உன்னாட்டமே உம்புள்ளையும் என்னைய ஒரு துரும்பாக்கூட மதிக்க மாட்டேங்கிறான். என்னைப் பார்த்தா உங்க ரெண்டு பேருக்கும் கேணைச்சிறுக்கி மாதிரி தெரியுதா?''
கைலாசம் எதையும் காதில் வாங்கியதாகத் தெரியவில்லை. டம்ளரில் இருந்த திராவகத்தை மூச்சுவிடாமல் குடித்துக் கொண்டிருந்தார்.
'' குடிய்யா குடி. இப்படி குடிச்சு குடிச்சே மொத்த சொத்தையும் அழிச்சாச்சு. இன்னும் உன் மகன் சம்பாத்தியத்தையும் குடிச்சு அழி''
துண்டால் முகத்தை துடைத்துக் கொண்டே வந்த ஆறுமுகம் கோபமாய் கேட்டான்.
'' இப்ப என்னத்துக்கு என் அப்பாவை வம்புக்கு இழுக்கிற? அவர் நிம்மதியா இருக்கிறது உனக்கு பிடிக்கலையா?''
'' எது எதுடா நிம்மதி?''
'' அவரோட நிம்மதியை அவர் தேடிக்கிட்டார். இதுல உனக்கு என்ன நஷ்டம் வந்தது?''
'' என் வாழ்க்கையே நட்டமாப் போச்சுடா. கட்டுன புருஷன் இப்படி முழு நேர குடிகாரனா இருந்தா எனக்கு எப்படிடா நிம்மதி இருக்கும்?''
'' எல்லாமே நீயே தேடிக்கிட்டது தானே? '' எரிச்சலாய் சொல்லி விட்டு துண்டை உதறி கொடியில் போட்டு விட்டு நகர முயன்றவன் முன்னே சென்று இடுப்பில் கையூன்றி நின்றாள்.
'' என்ன இப்ப என்னடா சொன்னே?''
'' ஆமா உண்மையைத் தானே சொன்னேன்''
'' எதுடா உண்மை?''
'' உன்னை எப்ப கட்டினாரோ அப்ப இருந்து தானே இப்படி முழு நேர குடிகாரனா ஆகிட்டார்''
'' அடேய் என்னடா சொல்றே''
'' ஆமா வீட்ல பொம்பளை ஒழுங்கா இருந்தா ஏன் மனுஷன் குடிக்கப்போறார். எப்பப்பாரு தெருவரைக்கும் கேட்கிற மாதிரி லபோதி போன்னு கத்துறது.
என்னிக்காவது எங்கப்பாவுக்கு பொண்டாட்டியா நடந்திருக்கியா?





அவர் பக்கத்தில வந்து இருமா பதமா நாலு வார்த்தை பேசியிருக்கியா? ஒருவேளை சாப்பாடு பரிமாறியிருக்கியா?''

ஆறுமுகம் அடுக்கடுக்காய் கேட்ட கேள்வியில் கொதித்துப்போனாள் சிந்தாமணி.

'' அடேய் இந்த கேள்வியையெல்லாம் உன் அப்பன் கிட்ட போய் கேளுடா''

''அதான் தினமும் உன் கூத்தை நேர்லயே பார்க்கிறேனே. இதுல அவ ரைப் போய் என்ன கேட்கிறது?''

'' ஏன்டா பேசமாட்டே அப்பனும், புள்ளையும் என்னய குப்பையா ஒதுக்கினாலும் உங்களுக்கு வடிச்சு கொட்டிட்டு இங்கேயே அடைஞ்சு கிடக்கிறேனே நீ இதுவும் பேசுவே, இன்னமும் பேசுவே. ''

'' இந்தா இப்ப ஏன் கத்தி கூப்பாடு போடுறே? என்ன வேணும் உனக்கு?''

'' வீட்ல பொட்டு அரிசி கிடையாது. என்னத்த வெச்சு சோறு ஆக்கு றது?''

'' இதுக்குத்தான் இவ்வளவு ஆர்ப்பாட்டமா?'' கோபமாய் தன் சட்டைப் பையில் இருந்த பணத்தை எடுத்து நீட்டினான்.

ஆவலாய் வாங்கி எண்ணிப் பார்த்தவளின் முகம் மாறியது. மீண்டும் எண்ணிப் பார்த்தாள்.

'' என்ன இருபது ரூபா குறையுது?''

'' செலவு பண்ணிட்டேன் ''

'' என்ன செலவா? உனக்கு என்ன செலவு?''

'' ஏன் எனக்கு செலவு இருக்காதா?''

'' அதான் என்ன செலவுன்னு கேட்டேன்? பீடி, சிகரெட் எதுனா பழக்கத்தை கத்துக்கிட்டியா? இல்ல உன் அப்பனை மாதிரி பட்டை

"நீ என்ன செய்யறே?"
"பீடி சுற்றுறேன்!"
"உன் கணவர் என்ன செய்றார்?"
"பீடி குடிச்சிட்டே உசுரைச் சுற்றுறார்!"
-கு.அருணாசலம், தென்காசி





சாராயம் அடிச்சியா?''

'' ச்சே உன்கிட்ட இருந்தா நானும் அப்பாவை மாதிரி ஆக வேண்டி யது தான்'' எரிச்சலாய் மொழிந்து விட்டு வெளித்திண்ணையில் போய் படுத்துக் கொண்டான்.

'' தூங்கிடாதய்யா கடையில போய் அரிசி வாங்கிட்டு வந்துடு சோறு வடிச்சுடறேன்''

'' நீயே கொட்டிக்க. வேலைக்குப் போறவன் பசியோட வருவான்னு தெரியாது? இனிமே சோறாக்கி நடுசாமத்தில உட்கார்ந்து நீயே தின்னு''

'' நான் என்ன வெச்சுக்கிட்டா வஞ்சனை பண்றேன்? அரிசி... பருப்பு...'' எனத் தொடங்கியவளின் பேச்சு நின்றது.

அதற்குள் தெருவில் இறங்கி நடக்கத் தொடங்கியிருந்தான் ஆறுமுகம். ஆத்திரத்தோடு கணவனின் முன்வந்து நின்றாள்.

''பார்த்தியா! உன்னை மாதிரியே உம்புள்ளையும் என்கிட்ட ஒரு வார்த்தை பேசமாட்டேங்கிறான். வீட்ல ஒத்த பைசா வெக்காம எடுத் திட்டு போய் குடிச்சி அழிச்சிடுற.

நான் என்னமோ வேணும்னே சாப்பாடு ஆக்காத மாதிரி உம்புள்ள பேசிட்டு போறான். ஏன்யா ரெண்டு பேருமாச் சேர்ந்து என்னைச் சி த்திரவதை பண்றீக?''

தன் முன் நின்று ஒருத்தி பேசுகிறாள் என்பதையே உணராதவர்போல் அமர்ந்திருந்த கட்டிலில் நீட்டி நிமிர்ந்தார் கைலாசம்.

''எல்லாம் என் தலையெழுத்து. என் அப்பனைச் சொல்லணும். ஊர் உலகத்தில மாப்பிள்ளையே இல்லேன்னு உனக்குப் போய் என்னைக் கட்டிவெச்சானே. அதுவும் ரெண்டாந்தாரமா!

உன்னைக் கட்டிட்டு என்ன சொகத்தைக் கண்டேன்? ரெண்டு வார்த் தையாவது பேசியிருப்பியா என் கிட்ட மூத்தாளை மறக்க முடியாத வன் எதுக்குய்யா என் கழுத்தில் தாலியக் கட்டின?

நான் வந்து கேட்டேனா என்னையைக் கட்டிக்கன்னு? அவ புண்ணிய வதி போய்ச் சேர்ந்துட்டா. ஆனா நான் உனக்கும் தேவையில்ல. உம் புள்ளைக்கும் தேவையில்ல.


வேற என்ன எழவுக்கு என்னைக் கட்டின?'' சிந்தாமணி ஆவேசமும் ஆற்றாமையுமாய்க் கேட்க, கைலாசத்திடமிருந்து பலத்த குறட்டை ஒலி மட்டுமே பதிலாய் வந்தது.

காலைநேரம் பரபரப்பில் இருந்தாள் தேன்மொழி. இளையவர்களை குளிக்க வைத்து தலைவாரி, கொல்லைப் புறத்தில் பூத்திருந்த செம்ப ருத்தி மலரைச் சூட்டி பள்ளிக்கு அனுப்பி வைத்தாள்.
பூங்குழலிக்கு சாப்பாடு எடுத்துக் கொடுத்து அவளையும் அனுப்பி விட்டு சாப்பாட்டுக் கூடையுடன் முத்தையாவை நெருங்கினாள்.
"அப்பா.!"
"என்னம்மா?"
"மதியத்துக்கு சோறும் நேத்து வெச்ச கருவாட்டு குழம்பும் இருக்கு. புளித்துவையலும் வெச்சிருக்கேன். போதுமா?"
"போதும்மா"
"மச்சிவீட்டுக்கு விருந்தாளி வர்றாங்களாம். பலகாரம் செய்ய கூப்பிட் டனுப்பினாக. போயிட்டு வந்திடுறேன்."
"நேரமாகுமாம்மா?"
"என்ன பலகாரம்னு தெரியல. எப்படியும் நேரமாகும். நீங்க சாப்பா டைக் கொண்டு போயிடுங்கப்பா."
"சரிம்மா.."
"ஆறுமுகத்துக்கும் சேர்த்துதான் வெச்சிருக்கேன். சாப்பிடச் சொல் லுங்க."
"சரிம்மா! அப்புறம்.. மச்சிவீட்டுக்காரர்கிட்ட கொஞ்சம் லேசுபாசா சொல்லி வையம்மா."
"எதைப்பத்திப்பா?"
"சின்னப்புள்ள படிப்பைப் பத்திதான். எவ்வளவு செலவாகும்னு தெரியலயே. அவர்கிட்டதானே கேட்கணும்."
"சொல்றேம்ப்பா.!"
"எப்படியும் கடனை அடைச்சிடுவோம்னு சொல்லு. அப்பத்தான் தயங்காமக் கொடுப்பார்."
"சரிப்பா! நீங்க மறக்காம சாப்பாடை எடுத்திட்டு போங்க."
"தேனு! போவோமா?" அடுத்த வீட்டு செல்வி அழைக்க, தேன்மொழி கையில் சிறு கூடையுடன் புறப்பட்டாள்.
"அப்பா! வீட்டைப் பூட்டிட்டு போங்க. நான் போயிட்டு வந்திடு றேன்." என்றவாறு செல்வியுடன் இணைந்து நடக்க ஆரம்பித்தாள் தேன்மொழி.
இது அவ்வப்போது நடப்பதுதான். மச்சிவீட்டுக்காரர் என அழைக்



கப்படும் ராஜதுரை அந்த ஊரின் செல்வந்தர். நாற்பதைக் கடந்திருந் தாலும் நரைகாட்டாத திடகாத்திரமான உடம்புக்காரர்.
ஊரில் பாதிக்குமேல் சொத்துக்கள் அவருக்குச் சொந்தமானவை. அதில் பெரும்பான்மையானவை அடமானமாக வந்த சொத்து. கட னைத் திருப்பிக் கொடுக்க முடியாதவர்களிடமிருந்து சுலபமாய் வாங் கிவிடுவார்.
ஊரை ஏமாற்றி சொத்து சேர்த்தாலும் ஆண்டு அனுபவிக்க ஒற்றைப் பிள்ளை இல்லாதவர். நோயாளியான நோஞ்சான் மனைவி. ஆனால் எதைப்பற்றியும் ராஜதுரை கவலைப்படுவதில்லை. வேளாவேளைக்கு அறுசுவை உணவு, ஆடம்பரமான வாழ்வு என வாழ்க்கையை ரசித்து வாழ்பவர்.
வீட்டில் உறவினர் வருகை என்றாலோ பண்டிகை என்றாலோ பலகாரம் செய்வதற்கென்று நான்கைந்து பெண்களை அழைப்பதுண்டு.
அரிசியை ஊறவைத்து உரலில் இடித்து மாவாக்கி முறுக்கு, அதிரசம், லட்டு என ஒருநாள் முழுக்க வேலை செய்தால் பைநிறைய பலகாரமும் கையில் நூறு ரூபாயும் கொடுத்தனுப்புவார்.
அது தனக்கு மிகவும் அவசியம் என்பதால் எத்தனை அலுப்பு என் றாலும் தேன்மொழி மறுக்காமல் புறப்பட்டு விடுவாள்.
அடுத்த தெருவில் இருக்கும் மச்சிவீட்டுக்குள் நுழையும் போதே அங் கிருந்த காவல்காரன் பரிச்சயமாய் புன்னகைத்தான்.
"வாங்க! வாங்க! என்ன ரெண்டுபேர் மட்டுந்தான் வந்திகளா?"
"ஆமா ராசு!" செல்வி புன்னகையோடு பதிலளிக்க, தேன்மொழி வராந்தாவில் சோர்வாய் அமர்ந்திருந்த சரஸ்வதியை நெருங்கினாள்.
"சரசக்கா! என்ன? உடம்புக்கு எதுனா முடியலையா?" சரஸ்வதி அலுப்பாய் நிமிர்ந்தாள்." யாரு தேனுவா?"

"ரவுடி நாட்டுக் கட்டைகளோட திரியறான்...?"
"உருட்டுக் கட்டைகளோட திரிஞ்சு போரடிச்சிடுச்சாம்!"
-ஜே.தனலட்சுமி, கோவை



''ஆமக்கா''
''வாதேனு! எது இம்புட்டு தூரம்?''
''என்னக்கா இப்படிக் கேக்கீங்க? வீட்டுக்கு விருந்தாளி வருணு பலகாரம் செய்ய கூப்பிட்டு அனுப்பியிருந்திகளே!''
''யாரு? நானா?'' குழிவிழுந்த கண்களை குழப்பமாய் விரித்தாள் சரஸ்வதி.
''ஆமா''
''யார் சொன்னது?''
''செல்வி அக்காதான் கூட்டியாந்துது''
''இல்லையே. நான் எதுவும் சொல்லலையே.''
''நான் தான் சொல்லி அனுப்பினேன்'' சற்று கனமான குரலில் இருவரும் நிமிர, ராஜதுரை தனது முரட்டு மீசையை வருடியவாறு நின்றிருந்தார்.
கணவனைக் கண்டதும் சரஸ்வதி பதட்டமாய் எழ தேன்மொழி மரியாதை நிமித்தமாய்க் கும்பிட்டாள்.
'கும்புடுறேனுங்க'
'ம். இருக்கட்டும் இருக்கட்டும் பின்கட்டுல பலகாரம் பண்ண எல்லாம் ரெடியா இருக்கு. போய் வேலையைத் தொடங்குங்க.''
''சரிங்கய்யா!''
''முறுக்கும் லட்டும் பண்ணிடு. அப்புறம் பால்பணியாரம் செய்திடு. இனிப்பு தூக்கலா இருக்கட்டும்''
'ஆகட்டுங்க!'' இருவரும் தலையாட்டி விட்டு நகர, கணவனை ஏறிட்டாள் சரஸ்வதி.
''யாருங்க வரப்போறாங்க?''
''எல்லாம் வேண்டியவங்க தான்''



''என் மாமியார் ஒரு பழமொழியை வெச்சு ரொம்பவும் அலட்டிக்கறாங்க...''
''என்ன பழமொழி அது...?''
''ஓல்டு ஈஸ் கோல்டாம்...!''
-ஜே.தனலட்சுமி, கோவை



''அதான் யாரு?''
''பொண்ணு வீட்ல இருந்து வர்றாங்க'' சாதாரணமாக ராஜதுரை சொல்ல, சரஸ்வதியின் உடல் அதிர்ந்தது. நடந்து கொண்டிருந்த தேன்மொழி நின்றாள்.
''என்ன? என்ன சொல்றீங்க?''
''என்னங்க...''
''பொண்ணு வீட்ல இருந்து நம்ம வீட்டைப் பார்க்க வர்றாங்க.'' ஏன் காது செவிடாபோச்சு''
''எதுக்கு?''
''எதுக்கா? பொண்ணைக் கொடுக்கிறவன் நம்ம வீடு வாசலை பார்க்க மாட்டானா? நாளைக்கு அவ வந்து வாழப்போற இடமாச்சே!''
தேன்மொழியும் செல்வியும் பலமாய் அதிர்ந்து நிற்க. சரஸ்வதிக்கு உண்மையிலேயே செவியை அடைப்பது போலிருந்தது.
''நம்ம வீட்ல.. எதுங்க மாப்பிள்ளை?'' உடல் நட தடக்க கேட்ட மனைவியை முறைத்தார் ராஜதுரை.
''ஏன்? என்னைப் பார்த்தால் மாப்பிள்ளையாய் தெரியவில்லையா?''
கணவனின் கேள்வியில் உடல் தள்ளாட அருகே நின்ற தூணைப் பற்றிக் கொண்டாள். செவியோடு சேர்த்து கண்களும் இருட்டிக் கொண்டு வர. காய்ந்த உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டு, சிரமமாய்க் கேட்டாள்.
''என்ன?''
''ஆமா! பொண்ணெல்லாம் பார்த்து முடிவு பண்ணியாச்சு. சம்பிரதாயத்துக்காக இன்னிக்கு வந்து வெத்தலை பாக்கு மாத்தப்போறாங்க. அபசகுனம் பிடிச்சமாதிரி இப்படி தலைவாசல்ல வந்து நிற்காதே. போ. உன் ரூம்ல போய் படு. போ'' என அதட்டிவிட்டு ராஜதுரை நகர, சரஸ்வதியின் இதயத்துடிப்பு எகிறியது. உடல் முழுக்க குளிர்ஜுரம் தாக்கியது போல் உதறிக் கொள்ள, தூணோடு சாய்ந்தாள்.

மாதுளம்பூ பித்தவாந்தியை நிறுத்தும் தன்மைகொண்டது. வயிற்றுக் கடுப்பு, ரத்த மூலம், உஷ்ணம் ஆகியவற்றை சீர் செய்யும். இதுதவிர மாதுளம் பழத்தோல் சீதபேதி. வாய்ப்புண், ரத்த பேதி போன்றவற்றிற்கு மருந்தாகும்.
-நாஞ்சில் க.நாகராஜன், பறக்கை.

## 5

பெரிதாய் அகலமாய் இருந்த இரும்புவாணலியில் ஊற்றியிருந்த எண்ணெய் தளதளவென கொதித்துக் கொண்டிருக்க, தேன்மொழியின் ரத்தம் அதைவிட அதிகமாய் கொதித்தது.

என்ன ஆணவம்? எத்தனை திமிர்? கட்டிய மனைவி கண் முன்னே இருக்கையில் இந்த கிழட்டு நாய்க்கு இன்னொரு பெண்டாட்டி கேட்கிறதா? அதையும் எத்தனை அலட்சியமாய் தன் மனைவியிடமே சொல்வான்?

அவன் தலையை இந்த எண்ணெய்ச் சட்டிக்குள் முக்கினால் என்ன? வெந்து போன முகத்தோடு இன்னொரு கல்யாணம் செய்ய முடியுமா?

பற்கள் நறநறக்க எண்ணெய்க் கொப்பரையை வெறித்துக் கொண்டிருந்தவளின் தோளில் தட்டினாள் செல்வி.

''ஏய் தேனு! எண்ணெய் கொதிக்குதே. முறுக்கை பிழிஞ்சு விடு'' என்றபிறகே தன் கையிலிருந்த முறுக்குக் குழல் நினைவு வர, மவுனமாய் மாவை அடைத்தாள்.

பித்தளையால் ஆன கனமான முறுக்குக் குழலை எண்ணெய் சட்டிக்கு மேலாக வைத்து லாவகமாய் பிழிய, நான்கைந்து முறுக்குகள் எண்ணெயில் மிதக்கத் தொடங்கின.

கையிலிருந்த குச்சிபோன்ற கம்பியால் அதைத் திருப்பிவிட்ட செல்வி, தேன்மொழியின் முகம் இறுகிப் போயிருந்ததைக் கவனித்தாள்.

''அடியேய் தேனு''

''ம்? என்னக்கா?''

''என்னாச்சுடி உனக்கு?''

''ஏன்? எனக்கென்ன?''

''உன் மூஞ்சு ஏன் பேயறைஞ்ச மாதிரி இருக்கு. வழக்கமா பேசிக்கிட்டே இருப்பியே''

''மனசு குமைஞ்சிட்டு இருக்குதுக்கா''

''என்ன?''

''அந்த ஆள் பேசினதை நீயும் தானே கேட்ட?''



''ஓ! அதைச் சொல்றியா? நமக்கெதுக்கடி அதெல்லாம்?''

இயல்பாய்ச் சொன்னவளை புருவம் உயர்த்திப் பார்த்தாள் தேன்மொழி.

''அக்கா?''

''தேனு! இதெல்லாம் பெரிய விட்டு சமாச்சாரம். நாம கண்டுக்கக் கூடாது''

''என்னக்கா சொல்ற? இது அநியாயம் இல்லையா? சரசக்கா எவ்வளவு பாவம்?''

''பாவம்தான். அநியாயம்தான். ஆனா நீயோ நானோ என்ன செய்ய முடியும்.?''

''செய்யணும்க்கா. ஏதாவது செய்யணும்.''

'ஷ். சத்தமா பேசாதடி. அந்த ஆளு காதுல விழுந்தால் நம்மளை ஏதாவது செய்திடுவான்.''

''ஏங்க்கா! சரசக்கா பிறந்த வீட்ல ஆளுகயாரும் இல்லையா?''

''இருந்தாலும் பிரயோசனம் இல்ல''

''என்ன?''

''இந்த ஆளு சரசக்காவோட சொந்த தாய்மாமன்தான். அந்த உரிமையில மிரட்டித்தான் இவளைவிட பதினேழுவயது சின்னப்பொண்ணா இருந்த சரசக்காவைக் கட்டிக்கிட்டானாம்.''

''அடப்பாவி!''

''வெளியே பார்க்கத்தான் இந்த ஆளு பெரியமனுஷன் மாதிரி இருக்கான். ஆனா சரியான ரவுடியாம். அதான் சொந்தக்காரங்க கூட இவனை ஏன்னு கேட்க பயப்படுறாங்க.''

''அதுக்காக இன்னொரு கல்யாணம் பண்ணினாக்கூட கேட்க மாட்

''ஞாயித்துக் கிழமையில மருந்து சாப்பிடாதீங்க...''

''ஏன் டாக்டர்...?''

''வேலை செய்யாது...!''

-ஜே.தனலட்சுமி, கோவை



டாங்களா?''
''எப்படிக் கேட்பாங்க?''
''ஏன்?''
''நமக்குத் தெரிஞ்சே சரசக்கா ஏழெட்டுவருஷமா நோயாளியாத் தானே இருக்கு?''
''ஆமா!''
''அதுக்கு முன்னால எப்படி இருந்திச்சோ. ஆனா கிளி மாதிரி பொண்டாட்டி இருந்தாலே குரங்கு மாதிரி ஒரு வெப்பாட்டி வைக்கிற ஆம்பிளைங்கடி.
இப்படி நோயோட போராடிட்டு இருக்கிற பொண்டாட்டி கூட எப்படி குடும்பம் நடத்துவான்? அதான் புதுசா ஒரு வழியைத் தேடிகிட்டார் போலிருக்கு''
''அநியாயமா பேசாதக்கா. இதுவே இவன் படுக்கையில கிடந்தா சரசக்கா இன்னொரு மாப்பிள்ளையத் தேடுமா?''
''தேனு!''
''இவனைக் கழுவி பொழுவி சேவகம் தானே பண்ணும்! இவனுங்களுக்கு மட்டும் ஏன்க்கா அந்த மனசு வரமாட்டேங்குது?'' கேட்கையில் தொண்டை அடைத்தது.
''விடு தேனு! நீயோ நானோ வருத்தப்பட்டு என்ன ஆகப்போகுது! நீ முறுக்கைப் பிழி''
''எனக்கு மனசே ஆறலக்கா. சரசக்கா எவ்வளவு நல்லவங்க. நாம அடுப்புல கிடந்து வேகும்போது காபி, சர்பத்னு ஏதாவது போட்டுத் தந்திட்டு நம்ம கூடவே இருக்கும். வேலை செய்யுற யாரையும் பசியோட இருக்க விடாது. அதுக்குப் போயி இப்படியெல்லாம் நடக்கணுமா? அப்படி என்னதான் நோவோ?''
செல்வி சுற்று முற்றும் பார்த்துவிட்டு குரலை தழைத்துக் கொண்டாள்
''தேனு''
''என்னக்கா?'' கிசுகிசுப்பாய்க் கேட்டாள்.
''சரசக்காவுக்கு நோய் வந்ததே இந்த சண்டாளனால தான்''
''என்னக்கா சொல்ற?''
''ஆமாண்டி. இந்த ஆளு அவுகளை கல்யாணம் பண்ணும்போது சரசக்காவுக்கு வயது என்ன தெரியுமா?''
''எத்தினி?''



''வெறும் பதினாறு வயது தானாம்''
''ஐயோ''
''இந்த ஆளு அப்பவே இப்படித்தான் கட்டுமுட்டா இருப்பான் போலிருக்கு இந்த எருமைமாட்டு வேகத்தை அந்தப்பச்ச உடம்பு எப்படித் தாங்கும்?''
செல்வி என்ன சொல்கிறாள் என்பதை புரிந்து கொண்டபோது தேன் மொழியின் தேகம் பதறிப்போனது.
''ஐயோ''
''இதுல அந்த அக்காவுக்கு ஏழெட்டு தடவை கர்ப்பம் கலைஞ்சு போச்சாம்''
''ஏன்.. எப்படி?''
''பொஞ்சாதி புள்ளை உண்டாகியிருந்தா புருஷன் ஒதுங்கியிருக்கணும். இந்தக் காட்டுப்பயலுக்கு அதெல்லாம் எங்கே தெரியப்போவுது.''
''அப்படீன்னா?''
''அப்படித்தான். எப்படியோ தொடர்ந்து கருகலைஞ்சதால சரசக்கா உடம்பு இப்படி நோஞ்சானாப் போச்சு. எம்புட்டு அழகா இருந்தவுக தெரியுமா?
கொழுகொழுன்னு நல்ல பளிங்காட்டம் அழகு. இடுப்பு வரைக்கும் தொங்குற சடை.... கலகலன்னு சிரிப்பு. ப்ச்! எல்லாத்தையும் அழிச்சிட்டான் இந்தப்பாவி!''
செல்வி பரிதாபமாய்ச் சொல்ல, தேன்மொழியின் கண்கள் கலங்கின. தொடர்ந்து வேலை செய்ய முடியாமல் சிலையாய் அமர்ந்துவிட்டாள்.
''இம்புட்டு நடந்தும் இந்தப் பயலுக்கு அரிப்பு தீரல்ல. அதான் நாய்க்கு புதுப்பொண்டாட்டி கேட்குது.''
''கெட்டும் கெட்டும் கட்டையில போக வேண்டிய வயசுல இவனுக்கு கல்யாணம் ஒரு கேடா?''
''இவனைச் சொல்லிக் குத்தமில்லடி. இவனுக்கு பொண்ணு கொடுக்கிறவனைச் சொல்லணும்.''
''ஏன் கொடுக்க மாட்டானுங்க. பசை இருக்கில்ல?'' ''என்ன? வேலையெல்லாம் ஒழுங்கா நடக்குதா?''
அதிகாரமாய் ஒலித்த குரலில் இருவரும் திடுக்கிட்டுத் திரும்ப, சமையலறை வாசலில் நின்று கொண்டிருந்தார் ராஜதுரை. முகம் முழுக்க

வெறுப்புடன் மரியாதைக்காக எழுந்து நின்றாள் தேன்மொழி. எதிரே நின்றவரின் பார்வை தன் கணுக்காலில் புதிய அவசரமாய் தூக்கி செருகியிருந்த பாவாடையை இழுத்து விட்டாள்.
பாவாடையோடு செருகப்பட்டிருந்த தாவணித் தலைப்பும் உருவிக் கொள்ள, நீளமான முந்தானை காற்றிலாடியது.
"என்னபுள்ள தேன்மொழி உன் அப்பன் எப்படி இருக்கான்?"
"ந நல்லா இருக்காருங்க."
"ஊர்லதான் இருக்கானா?"
"ஆமங்க."
"இல்ல.. என் கண்லயே படலையே. அதான் கேட்டேன்." என்றவாறே அவர்களை நெருங்கி தாம்பாளத்தட்டில் அடுக்கிவைத்திருந்த முறுக்கை எடுத்து கடித்தார்.
சாதாரண நாட்களாய் இருந்திருந்தால் தேன்மொழி பதறியிருக்க மாட்டாள். ஆனால் சற்றுமுன் பேசிக்கொண்டிருந்த நிகழ்வு மூலம் இப்போது அவள் கண்ணுக்கு ராஜதுரை ஒரு காமப்பிசாசாய் தெரிய, அவரது நெருக்கத்தில் பதறி சற்று பின்னால் நகர்ந்தாள்.
பெரிய பெரிய விறகுக் கட்டைகள் திமுதிமுவென எரிந்து கொண்டிருந்தது. ஆரஞ்சு நிற தீ நாக்குகள் நாலாபுறமும் நீட்டிக் கொண்டிருக்க, அவளது தாவணி அதை லேசாய் உரசியது.
செல்வியும் தேன்மொழியும் தாங்கள் பேசியதைக் கேட்டிருப்பாரோ என ஒருவித திகைப்போடு ராஜதுரையை பார்த்துக் கொண்டிருக்க, அவர் முறுக்கை சுவாரஸ்யமாய் மென்றார்.
"ம்! நல்லா பக்குவமா செய்திருக்கியே இன்னொன்னு எடுபார்ப்போம்."
"இதோங்கய்யா." தேன்மொழி குனிந்து எடுக்க, இப்போது தாவணி பொசுங்கத் தொடங்கியது.
"உன் அப்பன் வட்டி எதுவும் தந்துவிட்டானா?"
"இ..இல்லங்கய்யா."
"எப்போ தருவானாம்?"
"கடலை போட்டிருக்கோம். இன்னும் பத்து பதினைஞ்சு நாள்ல விளைஞ்சிடும். வித்ததும் முதல்ல உங்களுக்குத்தான் வட்டி கட்டணும்னு சொல்லியிருக்காரு."
ம்க்கும். அவனும் அந்த பொட்டல் காட்டையும் மொட்டைக் கிணறையும் வெச்சிகிட்டு எத்தனை நாள்தான் போராடுவானோ? எங்கிட்ட வித்திடுன்னு சொன்னாலும் கேட்க மாட்டேங்கிறான்."
"ஐயோ! அது எங்க குடும்பத்துக்கே படியளக்கிற தெய்வம் சாமி"
ம். இதையேத்தான் உன் அப்பனும் சொல்லிட்டு திரியுறான். வட்டியோட சேர்ந்து கடன் ஏறிட்டு இருக்கில்ல?"
"சீக்கிரமே திருப்பித் தந்திடுறோம்."
லேசாய் பற்றிக் கொண்ட நெருப்பு புசுபுசுவென மேலேற லேசாய் மூக்கை சுருக்கினாள் செல்வி. பார்வை அடுப்பிற்கு போக பகீரென்றது.
"ஐயோ! தேனு! தாவணி பத்திகிச்சுபாரு"
"ஆ." அலறியவாறே திரும்பும் முன் நெருப்பு வேகமாய் அவளது முதுகுவரை பரவிவிட, வீறிட்டாள்.
செல்வி பதட்டமாய் நெருப்பை அணைக்க முயல, ராஜதுரை சற்றும் தாமதியாமல் தேன்மொழியின் தாவணியை சுழற்றியெறிந்தார்.
'ஐயோ' பதறிதன் கரங்களால் மேனியைப் போர்த்திக் கொள்ள, சத்தம் கேட்டு கட்டிலில் படுத்திருந்த சரஸ்வதி கண்விழித்தாள்.
'என்ன சத்தம்?' படுக்கையை விட்டு எழுந்து சத்தம் வந்த திசையை உணர்ந்து, அடுக்களைக்குள் நுழைந்த போது மார்பின் குறுக்கே கைகளை வைத்துக் கொண்டு குன்றிப்போய் நின்றிருந்தாள் தேன்மொழி. அவளது தாவணி ஒரு ஓரமாய் பொசுங்கிக் கொண்டிருந்தது.
"ஐயோ! தேனு! என்னம்மா ஆச்சு?"
"சரசக்கா!" கேவலுடன் ஓடி வந்தவளை தனது முந்தானையால் போர்த்திக்கொண்டாள் சரஸ்வதி.
"என்னம்மா இது? பார்த்து செய்யக்கூடாதா? உடம்புல நெருப்பு பட்டதா?"

"எனக்கு எதிரிகள் அதிகம் டாக்டர்..."
"கவலைப்படாதீங்க..., என் கிட்ட வந்ததுக்கப்புறம் அவங்க மூலமா உங்க உயிர் போகாது..."
-ஜக்கி, கோவை



' இ..ல்..லக்கா.''

சரி சரி அழாதே வா. உனக்கு என்னோட புடவை தர்றேன் கட்டிக்க.''

''இல்லக்கா...வேண்டாம்.''

''ஏன்?''

ஏதாவது பழையதுணி இருந்தா..''

''ஷ்! பேசாமவா. ஏய் செல்வி! நீங்க பலகாரம் பண்ணினது போதும்.''

''அக்கா?''

''எண்ணெய்ச் சட்டியை இறக்கி வெச்சிடு. வா என் கூட.''

செல்வி தயக்கமாய் ராஜாதுரையை ஏறிட, அவர் உறைந்து போய் நின்றிருந்தார். அவரது கண்கள் தேன்மொழியின் கட்டழகு மேனியின் மீது நிலைகுதித்துப் போயிருக்க, சரஸ்வதியின் குரல் அதட்டியது.

''அங்கே என்ன பார்வை? வா என் கூட'' கணவனுக்கும் சேர்த்தே அவள் குரல் கொடுக்க, செல்வி அமைதியாய் அடுப்பிலிருந்த எண்ணெய் சட்டியை இறக்கிவைத்தாள்.

பெண்கள் மூவருமாய் அறையை விட்டு வெளியேற ராஜதுரை மட்டும் அசையாமல் நின்றிருந்தார்.

எரிவது நின்று விறகுக் கட்டைகள் புகைந்து கொண்டிருக்க, ராஜதுரைக்குள் புகைந்து கொண்டிருந்த காமத்தீ கொழுந்துவிட்டு எரியத்துவங்கியது. அவரது கண்கள் தேன்மொழியை வெறியோடு தொடர்ந்தது.

## 6

''உனக்கு ஏன் இந்த வேண்டாத வேலை?''

உன்னை யார் அங்கே போகச்சொன்னது? சீலையில பிடிச்ச நெருப்பு உடம்புல பட்டா என்ன ஆயிருக்கும்?

இனிமே பலகாரம் செய்யுறேன், புண்ணாக்கு செய்யுறேன்னு எங்கேயாவது போய்ப்பாரு. அப்ப இருக்கு உனக்கு.''

படபடவென பொரிந்து கொண்டிருந்த ஆறுமுகத்தை இமைக்காமல் ரசித்துக் கொண்டிருந்தாள். தேன்மொழி.

தன் மீதும் அக்கறைப்பட, தனக்கு ஒன்றென்றால் பதறி துடிக்க,



தன்னை அதட்ட, தன்மீது உரிமையுள்ள ஜீவன் இருக்கிறது என்ற எண்ணமே அவளை பெருமிதம் கொள்ள வைத்தது.''

''நான் பாட்டுக்கு பேசிக்கிட்டே இருக்கேன். இப்படி ஒண்ணும் பேசாம இருந்தா எப்படி?''

''நீயே! பேசய்யா. ''

''என்ன?''

''நீ கோபப்படும்போது ரொம்ப அழகா இருக்க''

''ஏய் சும்மா பேச்ச மாத்தாத.''

''அட! நினைச்சேன் ஆறுமுகம். நீ என்னை திட்டும்போது எனக்கு எம்புட்டு சந்தோஷமா இருக்கு தெரியுமா?''

''தேனு''

''உங்கிட்ட திட்டுவாங்கவே ஏதாவது தப்பு செய்யணும்போல இருக்கு''-புன்னகையோடு சொன்னவளை கண்டதும், அவனது கோபம் தானாய் இறங்கியது

''ம்!-நல்லா பேசத் தெரியுது. ஆனா சொன்ன பேச்ச கேக்க தெரியல''

'' இப்ப் என்னய்யா கேட்கல நான்? ''

''இப்படியெல்லாம் அடுத்த வீட்டுக்கு வேலைக்கு போகாதேன்னு சொல்லிருக்கேனா? இல்லையா?''

''உனக்கென்ன?''-நீ பாட்டுக்கு சொல்லிட்டு போயிடுவ எனக்கு மட்டும் ஆசையா?''

''பிறகேன் போற?''

''கைச்செலவுக்கு உதவும்னு தானே போனேன்?, பிள்ளைகளுக்கும் வீட்டுல தின்பண்டம் எதுவும் இல்ல. பள்ளிக்கூடத்தில இருந்து வந்து பசியோட என்னைப் பார்க்கும்போது எனக்கு எம்புட்டு வேதனையா இருக்கு தெரியுமா?''

''எது வேணும்னாலும் இனிமே எங்கிட்ட கேளு தேனு. நான் வாங்கித் தர்றேன்''

> பெண்களைப் போற்றி பாட வேண்டாம். அவர்களும் சமூகத்தின் ஒர் அங்கம். மனிதப் பிறவி என்று நினைத்தாலே போதும்.
> -ஆர்.பிரகாசம், காவேரிப்பாக்கம்.

''உங்கிட்ட மட்டும் என்ன கொட்டியா கிடக்கு?''
''இருக்கிறத வச்சு வாங்கித் தர்றேன்''
''இல்ல ஆறுமுகம்''
''தயவு செய்து நான் சொல்றதுக்கு சரின்னு சொல்லு''
''சரி''
''இனியே இந்த மாதிரி யார் வீட்டுக்கும் போகாதே''
''சரி''
''காசு, பணம் எப்ப வேணா சம்பாதிக்கலாம் தேனு. ஆனா உசிரு முக்கியமில்லையா?''
''ம்!''
''உனக்கு ஏதாவது ஆயிருந்தா''
''அதான் ஒன்னும் ஆகலையே''
''ஆகியிருந்தால் என் உசிரு போயிருக்கும்''
''ஏன்யா இப்படியெல்லாம் பேசுற?''
''நீ என் உசிரு தேனு. உனக்குத்தான் அது புரிய மாட்டேங்குது''
''எல்லாம் புரியும். உன்னை விட்டுட்டு அவ்வளவு சீக்கிரம் போயிடு வேனா?. உன் கையால தாலி வாங்கி உன் வீட்டிற்கு வந்து உன்னை பம்பரமா ஆட்டி வைக்காம இந்த உசிரு போயிடுமா?''

புன்னகைத்தான் ஆறுமுகம்.'' ''ம்! இந்த பூஞ்சிரிப்பு இன்னும் அழகாயிருக்கு. நீ எப்போவும் இப்படி சிரிச்சிட்டே இருய்யா. இந்த முகத்தை என் ஆயுசுக்கும் பார்த்துட்டே இருந்தாப் போதும். சோறு தண்ணீ எதுவும் வேண்டாம்.'' லயிப்போடு சொன்னவளை பார்த்து அதிசயித்தான்

''என்ன ஆச்சு! தேனு உனக்கு?''
''ஏன்ய்யா?''.
''நான் இப்படி ஏதாவது சொன்னா சினிமா பார்த்துட்டு வந்து ரீல் சுத்தி றியான்னு கேப்ப. இன்னிக்கு நீ பெரிய, பெரிய டயலாக்கா எடுத்து விடுற''
'' இது என் உள்மனசில இருந்து வர்ற வார்த்தைய்யா. இதுக்கு சாயம் பூசிடாதே''
''சேச்சே! உன்னால கூட இப்படியெல்லாம் பேச முடியுதான்னுபார்த் தேன்.''
''மனசு பூரா ஆசை இருக்கு ஆறுமுகம். ஆனா அதை வெளிக்காட்டத்



தான் சந்தர்ப்பம் அமையமாட்டேங்குது''
''நாம தான் அமைக்கணும்''
''எப்படி ?''
''இப்பச் சொல்லு. உடனே தாலியைக் கட்டிடுறேன்''
''ஆரம்பிச்சிட்டியா! அதெப்படிய்யா சுத்தி சுத்திக் கல்யாணத்திலேயே வந்து நிக்கிற''
''ம்க்கும்! என் அவஸ்தை உனக்கெங்கே புரியப்போகுது''
''புலம்ப ஆரம்பிச்சிடாதே. முதல்ல பூவோட பரீட்சை முடியட்டும். சரி! நான் கிளம்பட்டுமா?''
''இரு! என்ன அவசரம்''
''வீட்ல வேலையெல்லாம் அப்படி அப்படியே கிடக்குதுய்யா. போய் சோறாக்கணும்''
''அடுப்புக்கிட்ட பாத்து புழங்கு தேனு''
''பதினைஞ்சு வருஷமா சமைக்கிறேன். இப்ப என்ன புதுசா எச்சரிக் கிற?''
''காலையில ஆனமாதிரி எதுவும் ஆயிடக்கூடாதுல்ல?''
''ஐயோ! நீ பதறுற அளவுக்கு எதுவும் ஆகில, சொல்லப்போனா நல்லதுதான் நடந்திருக்கு''
''என்ன?''
''ஆமாய்யா! அந்த மச்சுவூட்டுக்காரனுக்கு கல்யாணம் பண்ண பொண்ணு வீட்டுக்காரங்க வந்தானுங்கல்ல?''
''ஆமா!''
''வந்தவனுங்க என் தாவணியில தீப்பிடிச்ச சேதி தெரிஞ்சதும் கைகூட நெனைக்காம கௌம்பிட்டானுங்களாம்''
''ஏனாம்?''
''ஏதோ அபசகுனமாம். இன்னிக்கு நேரம் நல்லாயில்லேன்னு போயிட்

''விமலா இருக்காளே... கண் கெட்ட பின்னாடி சூரிய நமஸ்காரம் பண்றாள்...''
''எப்படிச் சொல்றே...''
''ஆறு குழந்தைகளைப் பெத்துக்கப்புறம் குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் பண்றான்னா பாரேன்...''



-ஜக்கி, கோவை

டானுங்கலாம்''-உற்சாகமாய் சொன்னவளை புரியாமல் பார்த்தான்.

''இதில உனக்கென்ன சந்தோஷம்?''

''இருக்காதா? சரசக்கா எம்புட்டு நல்லவுக தெரியுமா?. அவுகள வீட்டுல வெச்சிட்டே இவன் இன்னொருத்திய கூட்டிட்டு வந்தால் அந்தக்கா மனசு எம்புட்டு சங்கடப்படும்.''

''அதான் கடவுளாப்பாத்து என் மூலமா அந்த கல்யாணத்த தடுத்துட்டாரு. மெய்யாலே நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன் ஆறுமுகம்.''

தேன்மொழி குதூகலமாய் உரையாடிக் கொண்டிருந்த நேரம் ராஜதுரை தன் வீட்டில் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். வெண்கலச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்த தேக்கு மர ஊஞ்சல் மெதுவாய் ஆடிக்கொண்டிருக்க, அதில் அமர்ந்து கண்களை மூடி சிந்தித்துக் கொண்டிருந்தார். மூடிய விழிகளுக்குள் தேன்மொழியின் பட்டு மேனி தோன்றி இம்சித்தது. அவளைத் தொட்டு மேலாடையை உருவிய கணத்தை எண்ணி எண்ணி அதிலேயே மூழ்கிக் களித்தார்.

இத்தனை காலமாய் பார்க்கும் போது தோன்றாத எண்ணம் இன்று புதிதாய் பீறிட்டு உடல் முழுதும் கிளர்ச்சியை உண்டாக்கியது.

வீணாக பெண்ணைத் தேடி ஏன் ஊர் ஊராய் அலைய வேண்டும்? கையிலேயே வெண்ணைக் கட்டி இருக்குதே. இத்தனை நாட்களை வீணாக்கியிருக்கிறேன்.

''ஐயா! கும்பிடுறேனுங்க''-என்ற பவ்யமான குரலில் விழிகளைத் திறந்தார். வண்டிக்காரன் மாரிச்சாமி முதுகு வளைத்து கைகளைக் கட்டிக் கொண்டு நின்றிருந்தார்.

''என்ன மாரி?, என்ன சொன்னானுவ?''

''ஐயா! அது.. வந்து..''

''சும்மா சொல்லு..''

''ஐயா! வெத்தலை பாக்கு மாத்துற நேரம் இப்படி தீப்பிடிச்சா குடும்பத்துக்கு ஆவாதாம்.''

''அதனால''

''குடும்ப சோசியர்கிட்ட கேட்டுட்டு நமக்கு தகவல் சொல்லி அனுப்புவாங்களாம்''

ஆடிக்கொண்டிருந்த ஊஞ்சலை நிறுத்தினார்

''மாரி!''



''ஐயா!''

''நீ போயி இந்தக் கல்யாணத்துல ஐயாவுக்கு சம்மதம் இல்ல. எல்லாத்தையும் விட்டுடலாம்னு சொல்லிட்டு வந்திரு''-மாரிச்சாமியின் முகம் பளிச்சிட்டது.

இந்த வீட்டு மகராசிக்கு வந்த துன்பம் போய்விட்டது என்ற மனநிறைவில் பலமாய் தலையாட்டினான்.

''சரிங்கய்யா!''

''எப்பவுமே நாமதான் முதன்மையா இருக்கனும் அவனுங்க என்னை வேணாம்னு சொல்றதுக்குள்ளநாம முந்திக்கனும்.''

''சரிங்கய்யா!''

''அப்படியே போற வழியில முத்தையாவைப் பார்த்து என்னை வந்து பார்க்கச் சொல்லு''

''ஐயா?''

''அவன் கடன் ஏறிட்டே போகுதுடா. பய கண்லயே மாட்ட மாட்டேங்கிறான்.''

''பாவம்ய்யா! அஞ்சு புள்ளைகளுக்கும் உழைக்கனுமே மத்தபடி அவர் நியாயஸ்தன் தானுங்க''

''தெரியும்டா! அதான் அவன்கிட்ட கொஞ்சம் பேசனும். வரச்சொல்லிட்டுப் போ!''

''ஆகட்டும்ய்யா''-மீண்டும் ஒரு கும்பிடு போட்டுவிட்டு மாரிச்சாமி நகர, லேசான இருமலோடு காபியை ஆற்றிக்கொண்டே வந்தாள் சரஸ்வதி.


''இந்தாங்க காப்பி''

''நீ ஏன் எடுத்திட்டு வர்ற? யார் கிட்டையாவது கொடுத்துவிட்டால் என்ன?''

''ஏங்க''

''இப்படி இருமிட்டே இருந்தா அந்த வியாதி எனக்கும் வந்தி

''பேஷன்ட்டுகளுக்கு போரடிக்குதாம்...''
''அதுக்கு...?''
''நர்ஸ்களோட டூட்டி நேரத்தை அதிகப்படுத்த சொல்றாங்க...''
-ஜக்கி,கோவை



டாதா?''-எரிச்சலாய்க் கேட்டவரை திகைப்பாய் பார்த்துவிட்டு, மவுன மாய் திரும்பி நடந்தாள்.
''நில்லு''-நின்றாள்.
''உங்கிட்ட ஒரு விஷயம் கேட்கணுமே''
''என்னங்க?''
''நேத்து நம்ம வூட்டுக்கு வந்தாளே முத்தையா மவ..''
''யாரு? தேன்மொழியா?''
''ம்! அவதான். அந்தப்புள்ள குணம் எப்படி? நல்ல புள்ளதானா?''
''ஏன் கேட்கிறீங்க?''
''பொட்டப்புள்ளையப் பத்தி எதுக்கு விசாரிப்பாக? -எல்லாம் கல்யாண காரியந்தான்.
''என்ன?''-வற்றிய முகத்தில் ஒளிவெள்ளம் பாய, மலர்ச்சியாய்க் கேட்டாள் சரஸ்வதி.
''என்னங்க? ஏதாவது மாப்பிள்ளை துப்பு வந்திருக்குதா?''
''ம்..ம்..! மையமாய் தலையை ஆட்டினார்.''
''தேன் மொழிக்கு என்னங்க அருமையா செய்வா. தங்கமான பொண். ஆனா..''
''என்ன ஆனா''
''அவ இப்போதைக்கு கல்யாணம் பண்ணமாட்டேன்னு சொல்லிட்டு இருக்காளே''
''ஏன்?ஏன்?''-பதட்டமாய்க் கேட்டார் ராஜதுரை. கணவனின் பதட்டத்திற்கு காரணம் புரியாமல் திகைத்தாள்.
''வேற ஒண்ணுமில்ல அவ தங்கச்சிய டீச்சருக்கு படிக்க வெக்கணும், அதுவரைக்கும்...''

''சப்பமா இருக்கற மனைவியை ஊருக்கு அனுப்பிட்டு வேலைக்காரி கிட்ட சில்மிஷம் பண்ணலாம்னு பார்த்தேன்... முடியலை...''
''ஏன்...?''
''அவள் சப்பமா இருக்காளே...''
-ஜக்கி,கோவை





''ப்பூ! இவ்வளவு தானா? நான் என்னமோ ஏதோன்னு நினைச்சிட்டேன். அத படிக்க வெச்சிடலாம்''-அவர் அலட்சியமாய் சொன்னதும் முகம் மாறினாள்.
''என்ன..சொல்றீங்க?''
''உனக்கு தேன்மொழிய பிடிக்குமில்ல?''
''ஆ..மா! ஏன் கேட்கிறீங்க.''
''அப்ப அவதான் உன் தங்கச்சி''-சுளீர் என நிமிர்ந்தாள் சரஸ்வதி.
''என்ன?''
''அவளும் உம்மேல ரொம்ப அன்பா இருக்கா. உன்னை அக்கறையா கவனிச்சிப்பா. உங்களுக்குள்ள சக்காளத்தி சண்டையும் வராது. உன்னை கவனிக்கிறதுக்காகத்தான் அவளை கட்டிக்கப்போறேன்.''-ராஜதுரை இயல்பாய் சொல்ல சரஸ்வதியின் தலையில் இடி இறங்கியது.

## 7

''அயித்தான்''-காதருகே ஒலித்த கொஞ்சும் குரலில் ஆறுமுகத்தின் உறக்கமும் கண்டு கொண்டிருந்த கனவும் லேசாய் கலைந்தது. மேளதாளங்கள் முழங்க, ஊரார் கூடி அட்சதை தூவ, தேன்மொழியின் பொன் கழுத்தில் மாங்கல்யம் நான் பூட்டும் வினாடியில் யார் தன்னை அழைத்தது?
''அயித்தான்! காபி கொண்டாந்திருக்கேன்''-மீண்டும் செவியைத் தீண்டிய குரலில் விழிகளைத் திறந்தான். பாவடை சட்டையும் இரட்டை சடைப்பின்னலுமாய் குழந்தைத் தனம் மாறாத அந்த சிறுபெண் அவனுக்கு வெகு அருகே நின்று கொண்டிருக்க, சட்டென எழுந்தமர்ந்தான்.
''யா..யாரு?''
''நான் தான் அயித்தான். மல்லிகா.''
''மல்லிகாவா?''
''ஆமாய்யா! என் தம்பி மவ. ஊர்ல இருந்து வந்திருக்கா.''-என்றவாறே வந்தாள் சிந்தாமணி.

''ஓஹோ!''-அசுவாரஸ்யமாய் சொல்லிவிட்டு கட்டிலைவிட்டு இறங்கினான் ஆறுமுகம்.

''காபி குடிங்க அயித்தான்''

''ஏய்! இதென்ன அசிங்கமா அயித்தான் நொயித்தான்னுட்டு''

''ஏன்யா! அத்தை மகனை அயித்தான்னுகூப்பிடுறதுதானே முறை.''

''முறையெல்லாம் உங்களோட நிக்கட்டும்''

''இப்படிச் சொன்னா எப்படி? நாளைக்கு கல்யாணம்னு நடந்தா அவ இப்படித்தானே கூப்பிடணும். அதான் இப்பவே கூப்பிட்டு பழகுன்னு நான்தான் சொன்னேன்!'' -சிந்தாமணி சர்வசாதாரணமாய்ச் சொல்ல, ஆறுமுகத்தின் புருவம் உயர்ந்தது. குரலில் கடுமை கூடியது.

''என்ன? கல்யாணமா?

''ஆமா''

''யாருக்கு?''

''இதென்ன கேள்வி? உனக்கும் இவளுக்கும் தான்''-சொல்லி முடிப்பதற்குள் சீறினான்.

''அறிவிருக்கா? நான் உங்கிட்ட கல்யாணம் பண்ணிவையுன்னு கேட்டேனா?''

''ஏன்? புள்ளைகளை கேட்டுத்தான் பெத்தவுக கல்யாணம் பண்ணுவாகளா?''

''நீ என்னைப் பெத்தவளும் இல்ல. நான் உன் புள்ளையும் இல்ல.''

''அப்போ ..நான் யாருடா''

''என் அப்பா உன் கழுத்தில தாலிகட்டிட்டா நீ எனக்கு அம்மா ஆகிடுவியா?''

''நான் உன்னை அப்படித்தான்யா நினைக்கிறேன்.''

''இந்த மாயமெல்லாம் எங்கிட்ட காட்டாதே. ஒழுங்கா இந்தப் பொண்ணை ஊருக்கு அனுப்பிடு''

ஆறுமுகத்தின் கோபத்தில் மல்லிகா மிரண்டு பின்வாங்க, சிந்தாமணி சிலிர்த்துக் கொண்டு வந்தாள்.

''ஏன்? ஏன் அனுப்பணும்?''

''அனுப்பலன்னா நடக்கிறதே வேற''

''அனுப்ப முடியாது. நீ ஒரு பக்கம் உன் அப்பன் ஒரு பக்கமா மூஞ்சியத் திருப்பிகிட்டு இருக்கீக. இந்த வீட்ல நான் திக்கத்துப் போயிதானே இருக்கேன்.



காய்ச்ச தலவலின்னு நோவு வந்து படுத்தா ஒரு சுடுதண்ணி வெச்சித்தர எனக்கு யாரு இருக்கா?''

''அதுக்கு?''

''எனக்குத்தான் புள்ளக்குட்டி பெத்துக்கக் கொடுப்பினை இல்லாமப் போச்சி. என் தம்பி மவ என்னைத் தாயா பார்த்துப்பா.''

''உனக்குத் தேவைன்னா நீ யாரை வேணாக் கூட்டி வந்து வெச்சுக்க. ஆனா கல்யாணம் கருமாதின்னு என் சொந்த விஷயத்தில தலையிடாதே''

''எம்ப்பா! உனக்கும் வயசாகுதே. அத அந்த அந்த வயசில செய்ய வேண்டாமா?''

''அதைப் பத்தியெல்லாம் நீ கவலைப்பட வேண்டியதில்லை.''-ஒற்றை விரலை நீட்டி எச்சரித்தவனை பரிதாபமாய் பார்த்தாள் சிந்தாமணி.

''ஏன்யா! நான் கவலைப்படக் கூடாதா? நான் உன் அம்மாதானே''

''இல்ல! இல்ல!''- ஆறுமுகம் பலமாய் மறுக்க, சிந்தாமணி விரக்தியாய் சிரித்தாள்.

இத்தனை களேபரத்திலும் குடிப்பது ஒன்றே குறி என்பதால் குடித்துக் கொண்டிருந்த கணவனை வெறுப்பாய் பார்த்துவிட்டு மகனிடம் திரும்பினாள்.

''உன்னைக் காரணம் காட்டிதான் உன் அப்பனுக்கு என்னை கட்டி வெச்சாக.''

''அதுதான் எங்க தாத்தா பண்ணின பெரிய தப்பு''

''தப்புதான்யா. ஆனா தண்டனைய நான் அனுபவிக்கிறேன். நான் என்ன பாவம் பண்ணினேன்?''

''உன்னை யாரு கழுத்தை நீட்டச் சொன்னது? காசு பணம் இருக்குன்னு தானே தலையாட்டின? நீ எப்ப உள்ளே வந்தியோ அப்பவே எல்லாம் போச்சு.

சொத்து போச்சு. நிம்மதி போச்சு. அப்பாவை முழுநேர குடிகாரனாக்கிட்ட என்னை கூலிக்காரனா அடுத்தவன் கிட்ட வேலைக்கு அனுப்பிட்ட.

இன்னும் என்ன மிச்சம் இருக்குன்னு என் மேலே பாசத்தைக் கொட்டுற. என்னை உன் தம்பிமவளுக்கு கட்டி வெச்சு உன் குடும்பத்துக்கு அடிமை ஆக்கலாம்னு பார்க்கிறியா?''

ஆறுமுகத்தின் வார்த்தைகள் நெருப்பாய் தகிக்க, சிந்தாமணிக்கு கண்

கள் பொங்கின. பேச்சு வாராமல் தடுமாறியவனைக் கண்டு மல்லிகா வாயைத் திறந்தாள்.

''அயித்தான்''

''அடச்சீ வாயை மூடு. இனிமே இப்படிக் கூப்பிட்ட பல்லை உடைப் பேன்.''

''ஐயோ''

''ஏய்! உனக்கு என்ன வயசாகுது?''

''ப..பதினாறு முடிஞ்சு..பதினேழு..''

''பதினேழு வயசுல உனக்கு கல்யாணம் கேக்குதா?

உன் வயசுப் புள்ளைக எல்லாம் படிக்கப்போகுது. உனக்கு...''

''வந்து...அத்தை தான்..''

''சொல்றவங்க சொன்னா உனக்கெங்கே போச்சு புத்தி? அறிவு வேணாம்?''

''போதும்ப்பா! உன் கோபத்தை அந்த பச்சைப்புள்ளகிட்ட காட் டாதே!''.

''இது பச்சை புள்ளன்னு இப்பத்தான் தெரியுதா?''

''மன்னிச்சிடுய்யா! தப்புதான். உன்னை என் புள்ளையா நினைச்சி கல் யாணம் பண்ணிப் பார்க்கணும்னு ஆசைப்பட்டது தப்புதான்.

உன் மனசிலயாவது கொஞ்சம் ஈரம் இருக்கும்னு நினைச்சேன். உன் னைவிட உன் அப்பன் தேவலை. அவராவது பேசாம இருந்து கொன் னாரு. நீ பேசியே கொல்றியே. போதும்யா. போதும் இந்த வீட்டுக்கு வந்து நான் வாழ்ந்ததும் போதும். சீரழிஞ்சதும் போதும்.''- என்றவள் கணவனைத் திரும்பிப்பார்த்தாள்.

''போதுமாய்யா? இதுக்குத்தான் இந்தப்புள்ளைய எங்கிட்ட நெருங்க

''அவர் போலி டாக்டர் தான்னு எப்படிச் சொல்றே...''

''நான்பட்ட இரும்புச்சத்து மாத்திரைகள் துருப்பிடிச்சிடும் கறாரே...''

-ஜக்கி, கோவை





விடாம உன்கூடவே வெச்சிருந்தியா?''

கைலாசம் குடிப்பதை நிறுத்தினார். ஆனால் நிமிரவில்லை. முகம் முழுக்க வெறுப்பாய் நோக்கினாள் சிந்தாமணி.

''உனக்கு எவ்வளவு வக்கிரபுத்தியா. ஊர்ல எல்லோரும் என்னை மலடின்னு சொன்னாளுக. அப்பவும் நீ இப்படித்தான் வாயை மூடிட்டு இருந்த.

என்னாலதான் நீ குடிகாரனா ஆன. உன் சொத்தெல்லாம் போச்சுன்னு ஊரே சொல்லிச்சி. அப்பவும் நீ இப்படித்தான் இருந்த.

இப்ப உன் மகனும் அதையே சொல்றான். நான் பணத்துக்காக வந்த வளாம். என்னை வேசின்னு சொல்லாமச் சொல்றான். இப்பக்கூட நீ வாயைத் திறக்க மாட்ட இல்ல? ஊரெல்லாம் என்னை மோசக்கா ரின்னு சொல்லலாம். நீ மட்டும் உத்தமனா அமைதியா இருந்திடுவ. இல்ல?''

கைலாசம் நிமிரவே இல்லை. அவரது கண்களில் இருந்து நீர் சொட்டி யது. அதைக் கண்டதும் ஆறுமுகம் ஆவேசமானான்.

''இப்ப எதுக்கு என் அப்பாவை அழவைக்கிற?''

''ஏன்? நான் அழலை? உன் அப்பனால கிட்டதட்ட இருபத்தியேழு வரு ஷமா நான் அழலை?''-சிந்தாமணியும் கண்களில் நீர் தெறிக்க, ஆவேச மாய்க் கேட்க, திகைத்துப் போனான் ஆறுமுகம்.

''தாலி கட்டினதைத் தவிர புருஷனா ஒரு நாளாவது என்கிட்ட நடந்தி ருக்காரா இந்த ஆளு? கேளுடா உன் அப்பன்கிட்ட.'' - கண்ணீரைத் துடைத்தவாறே அவள் கேட்க,திகைப்போடு தந்தையின் பக்கம் திரும் பினான்.

இப்போதும் அவர் நிமிராமல் கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தார்.

''அன்னிக்குக் கேட்டியே! என் அப்பனுக்கு ஒரு வேளையாவது சாப் பாடு பரிமாறினியா? உட்கார்ந்து பேசியிருக்கியான்னு.

எனக்கும் ஆசைதான் இதையெல்லாம் செய்ய. ஆனா உன் அப்பன் எங்கிட்ட ஒத்தவார்த்தை கூட பேசினதில்லையே''.

ஆறுமுகம் பலமாய் அதிர்ந்தான். ''எ.ன்..ன?''

''தலைக்கு மேலே வளர்ந்த புள்ள நீ. வெட்கத்தை விட்டு உன்கிட்ட சொல்றேன். என் நிழலைக் கூட உன் அப்பன் தொட்டதில்ல. தெரி யுமா?''

தலை கிறுகிறுத்தது. பேச்சுவராமல் உறைந்து போனவனாய்

நம்பமுடியாத சிந்தாமணியைப் பார்த்தான்.

"என் பெரியப்பா மவளைத்தான் உன் அப்பனுக்கு கட்டியிருந்தது. ரெண்டு வருஷம் தான் வாழ்ந்தா. நீ கைக்குழந்தையா இருந்தப்ப திடீர்னு மூளைக்காய்ச்சல் வந்து போய்ச்சேர்ந்திட்டாள்.

அப்ப நீ மூணுமாசக் குழந்தை. நீ சத்திசுதறுறத தாங்க முடியாம உன் தாத்தாவும், பெரியப்பாவும் என் அப்பன்கிட்ட பேசி என்ன கட்டி வெச்சாங்க.

நானும் எவ்வளவு மறுத்துப் பார்த்தேன். ஏன்னா அக்கா மேல உன் அப்பன் எம்புட்டு பிரியமா இருந்தாருன்னு எனக்குத் தெரியும். கடைசியா உன்னைக் காட்டி இந்தப்புள்ளைக்காகவாது ஒத்துக்கம்மான்னு உன் தாத்தா கெஞ்சினாரு. நானும் சம்மதிச்சேன். ஆனா உன்னைக் கூட என்னை தூக்க விடமாட்டாரு இவரு."

"ஏ..என்?"

"உன்னை வெச்சி இவரை நெருங்கிடக்கூடாதாம். உன் அம்மாவைத் தவிர யாரும் அவருக்குத் தேவையில்லையாம்."

"அப்போ...ஏன் கல்யாணம் பண்ணீங்கப்பா?"

"அதையேத் தான் நானும் கேட்கிறேன். ஏழையோ, பாழையோ எவனோ ஒருத்தனைக் கட்டி குடும்பம் நடத்தி இந்தப் பிறவிய கழிச்சிருப்பேனே.

எனக்குத் தாலியைக் கட்டி கூட்டிவந்து இந்த வீட்ல நான் வாழாவெட்டியாத்தானே வாழ்ந்தேன்.புருஷன் கைபடாம புள்ளையத் தூக்கிக் கொஞ்சாம...ஐயோ!நான் பட்ட வேதனை..." -சிந்தாமணியின் கண்கள் நீரைப் பொழிய ஆறுமுகத்தின் இதயம் கண்ணீர் சிந்தியது.

"ஊர்ல என் காதுபடவே எத்தனை பேர் மலடின்னு சொன்னாங்க. உன் அப்பன் குடிச்சே சொத்தையெல்லாம் அழிக்க, அந்த பழியும் என் தலையில தானே விடிஞ்சது. நீ கூட அப்படித்தானே நினைக்கிற?"

"இல்ல... நான்...தெரியாம..."

"ஆனா இத்தனை பழியை ஏத்துகிட்டு உன் அப்பனை யாரும் ஒரு குறைசொல்ல விடலையே நான். கட்டின புருஷனை யார்கிட்டயும் விட்டுக் கொடுக்கமாட்டேன். அதான் என் ஆத்தாமையை கோபமா வெளியே காட்டிகிட்டு பொல்லாதவளா காட்டிகிட்டேன். காலப்



போக்கில அதுவே நிரந்தரமாகிடுச்சி"-பெருமூச்சு விட்டவாறே சுவரில் சாய்ந்து அமர்ந்தாள் சிந்தாமணி.

மல்லிகா உறைந்து போய் நிற்க, ஆறுமுகத்தின் இதயம் எரிமலையாய் குமுறியது. தந்தையை நெருங்கினான்.

"அப்பா!"

கைலாசம் நிமிரவில்லை.

"நீங்க செய்தது நியாயமா?".

இப்போதும் அவர் அசையவில்லை.

"அம்மாவை மறக்க முடியாம அவங்க நினைப்புலயே வாழ்ந்தது பெரிய விஷயம்தான். பெருமைக்குரிய விஷயம் கூட.

ஆனா...அதுக்காக...இன்னொரு பெண்ணோட வாழ்க்கையை கெடுக்கலாமா? எதுக்காக சின்னம்மா கழுத்தில தாலி கட்டி அவங்க எதிர்காலத்தை இருட்டாக்குனீங்க?"

"....."

"பதில் சொல்லுங்கப்பா"-தந்தையைப்பற்றி உலுக்க, கைலாசத்தின் உடல் எந்த எதிர்ப்பும் இன்றி மகன் மீது சரிந்தது. "அப்பா... அப்பா..."

மூவரும் அதிர, கைலாசம் கடைசிவரை மவுனமாக இருந்து உயிரை விட்டிருந்தார்.

"தலைவரே! நான் மேடையில் பேசும் போது சின்னதா தப்பு பண்ணிட்டா கூட நம்மாளுங்க கைகொட்டி சிரிக்குறாங்க"

"சரி! சரி! கவலைப்படாதே! இனிமேல் அவனுங்களை கைகொட்டாம சிரிக்க சொல்லி சத்தம் போடுறேன்"

-அரிசு ஸ்ரீராம், சாத்தூர்



# 8

வட்டமாய் இருந்த கழுநீர்த் தொட்டியில் தவிட்டைக் கொட்டி, கையால் கரைத்துக் கொண்டிருந்தார் முத்தையா. காளைகள் இரண்டும் வாயெடுக்காமல் நீரை உறிஞ்சிக்கொண்டிருக்க, வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டு திரும்பினார்.

காரை விட்டு இறங்கிய ராஜதுரை தன் வீட்டிற்குள் நுழையவும், பதட்டமாய் கைகளை கழுவிட்டு தலையில் கட்டியிருந்த மேல்துண்டால் துடைத்தபடி ஓடிவந்தார்.

''ஐயா! வாங்க சாமி! எது இம்புட்டு தூரம்?''

''என்ன முத்தையா எப்படி இருக்க?''-பட்டுவேட்டி, அங்கவஸ்திரம் சகிதமாய் வந்து நின்றவரைக் கண்டு மலைத்துப் போனா முத்தையா, அவரது விசாரிப்பில் இன்னும் வியந்தார்.

''ந..ல்லா இருக்கேனுங்க.''

''வீட்டுக்கு வந்தா உள்ளே கூப்பிடமாட்டியா?''-என்றதும் பதறி நெற்றியிலறைந்து கொண்டார் முத்தையா.

''மன்னிச்சிடுங்கய்யா! வரவர புத்தி வேலை செய்யமாட்டேங்குது. உள்ளார வாங்கய்யா. இப்படி உட்காருங்க''-ராஜதுரைக்கு முன்பாக உள்ளே நுழைந்து கயிற்றுக்கட்டிலைத் தட்டிப் போட்டார்.

அந்த இடுக்கமான குடிசையில் சிரமமாய் நுழைந்த ராஜதுரை கண்களை சுழலவிட்டுக் கொண்டே அமர்ந்தார்.

மண்தரையால் ஆன குடிசை வெகுசுத்தமாய் இருந்தது. வீட்டிற்குள் கட்டியிருந்த கொடியில் சில துணிகள் ஊசலாடிக் கொண்டிருக்க, சொற்பமாய் சில தட்டுமுட்டு சாமான்கள்.

கைகளைக் கட்டிக்கொண்டு நின்ற முத்தையா தயக்கமாய் கேட்டார்.

''ஐயா! வ..ட்டி பணம் கேட்டு வந்தீகளா?''

''சேச்சே! கரிசம்பட்டியில ஒரு கல்யாணத்துக்கு போயிட்டு வந்தேன். இன்னிக்கு நல்ல முகூர்த்த நாளாம். அதான் அப்படியே உன்னைப் பார்த்து பேசிட்டு போலாம்னு வந்தேன்.''

''என்னங்கய்யா! வூட்ல எதுனா வேலை இருக்குதா?''



''ம்.ம்..ஆமா! போன வாரமே மாரிகிட்ட உன்னை வரச்சொல்லி சொல்லியிருந்தேனே? சொன்னானா?''

''சொன்னானுங்க. நானும் ரெண்டு நாளா வந்து பார்த்தேனுங்க. ஐயா வூட்ல இல்லையே.''

''ஆமா முத்தையா. சம்சாரத்துக்கு உடம்புக்கு ரொம்ப முடியாமப் போச்சு. ஆஸ்பத்திரியில சேர்த்திருக்கேன்.''

''அடப்பாவமே! என்னங்கய்யா ஆச்சு?''

''புதுசா என்ன? எப்பவும் போலத்தான். இருமல், வாந்தி மயக்கம்னு... ம்ப்ச்! அலுத்துப் போச்சு முத்தையா''-ராஜதுரை களைப்பாய் சொல்ல, முத்தையாவின் மனமும் வருந்தியது.

இத்தனை நாளாய் இல்லாமல் தன்னுடன் இவ்வளவு இயல்பாய் பேசுகிறாரே என்ற உற்சாகம் ஒருபுறம்.

''மனசைத் தளரவிட்டுடாதீங்க ஐயா. அம்மாவுக்கு சீக்கிரமா குணமாகிடும்.''

''எங்கே? அந்த நம்பிக்கையெல்லாம் போச்சு''

''ஐயா!''

''டாக்டரு நாளு குறிச்சிட்டா முத்தையா''

''அய்யோ! என்னய்யா சொல்றீக?''

''ஒரு மாசமோ ரெண்டு மாசமோ! அதுக்கு மேலே தாங்காதுன்னுட்டான்.''-ராஜதுரையின் கண்கள் கலங்க பதறிப் போனார் முத்தையா.

''கலங்காதீங்கய்யா. உங்க நல்ல மனசுக்கு எதுவும் தப்பா நடக்காது.''

''அடப்போ முத்தையா! சொந்த அக்கா மகளாச்சேன்னு ஒரு நோயாளிப் பொண்ணைக் கட்டினேன். கல்யாணமானால் நல்லா ஆகிடும்னு சொல்லித்தான் கட்டிவெச்சாக. கட்டின நாள்ல இருந்து அவளுக்கு வைத்தியம் தான் பண்ணிட்டு இருக்கேன்.

''நிகழ்ச்சிகளுக்கெல்லாம் திடீர் திடீர்னு பிரேக் விட்டு விடுகிறாங்களே!''

''அவர் டிரைவர் போல அதான் 'பிரேக்' போட்டு விடுகிறார்!''

-அரவக்குறிச்சிப்பட்டி, எம்.அசோக்ராஜா



என்ன நோயின்னே தெரியல. பில்லி சூனியம்ன்னு சொல்றானுங்க. செய்வினை கோளாறுன்னு சொல்றானுங்க. டாக்டரைக் கேட்டா புதுசு புதுசா வியாதி பேரைச் சொல்றானுங்க.

அவளுக்காக எவ்வளவோ செலவழிச்சேன். ஆனா நோய்தான் தீர்த்த பாடில்ல. நானும் மனுஷன் தானே. எனக்கும் ஆசாபாசம் இருக்காதா? எல்லாத்தையும் அடக்கிட்டு இவளுக்காக சன்னியாசி மாதிரி வாழ்ந்தேன். ஆனா... இப்ப அவளே என்னை விட்டு போயிட்டா எனக்கு யாரு இருக்காசொல்லு?''-ராஜதுரையின் உருக்கமான பேச்சும் முதலைக் கண்ணீரும் முத்தையாவை பலமாய் தாக்கியது.

''கலங்காதீங்க ஐயா''

''நேத்து ஆஸ்பத்திரியில வெச்சு என் கையப்பிடிச்சிகிட்டு அழுதா. என்னவெல்லாமோ சொல்றா''

''அம்மா என்னய்யா சொன்னாக?''

''அதை எப்படி என் வாயால சொல்லுவேன்?''

''சும்மா சொல்லுங்கய்யா''

''அது... வந்து...''

''சொல்லுங்கய்யா''

''அவ கண்ணை மூடுறதுக்குள்ள நான் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கனுமாம்.''-தயக்கமும் தீர்க்கமான பார்வையுமாய் ராஜதுரை சொல்ல, முத்தையா பலமாய் அதிர்ந்தார்.

''எ..ன்..ன?''

''பார்த்தியா? உனக்கே எவ்வளவு அதிர்ச்சியா இருக்கு? நான் அவ புருஷன். எனக்கு எம்புட்டு சங்கடமா இருக்கும்? முடியாதுன்னு மறுத்தா ரொம்ப அழுவுறா. அவளால எனக்கு எந்த சந்தோஷமும் கிடைக்கலையாம். இனிமேலாவது நான் சந்தோஷமா வாழனுமாம். கண்டிப்பா இன்னொரு கல்யாணம் பண்ணியே ஆகனும்னு என் கிட்ட சத்தியம் வாங்கிட்டா முத்தையா!''

முத்தையா ஒரு வெகுளி.சூதுவாது அறியாதவர். வெளுத்ததெல்லாம் பாலாய் நினைப்பவர் என்பதை வெகு துல்லியமாய் அறிந்து வைத்திருந்த ராஜதுரை கவனமாய் காயை நகர்த்த முத்தையா மெய்யாகவே கலங்கிப்போனார்.

அவர் வீட்டில் வேலை செய்யும் பெண்களுக்கு தெரியும் உண்மைகள், தோட்டக்காடே கதியென்று கிடக்கும் முத்தையாவிற்கு தெரிய நியாய



மில்லையே.

பணமும் பகட்டும் நிறைந்த மனிதர் தன்னைத்தேடி வந்து சொந்தக்கதையைக்கூறி ஏன் கண்ணீர் வடிக்கவேண்டும் என்பதைக் கூட அவர் யோசிக்கவில்லை.

''என்ன முத்தையா! எதுவும் பேசமாட்டேங்கிற?''

''அம்மா சொல்றதும் நியாயம் தானுங்களே''

''மு..த்..தையா?''

''அம்மாவுக்கு ரொம்ப நல்ல மனசுங்க. அவுக போனப்பிறகு நீங்க தனியா தவிக்கக் கூடாதுன்னுதான் இப்படி ஒரு முடிவை எடுத்திருக்காக.''

''இல்ல முத்தையா! நான் எப்படி.. இன்னொரு கல்யாணம்...''

''இதுல தப்பில்லைய்யா. அம்மா மனசுகுளிரனும்னா நீங்க சம்மதிச்சுத்தான் ஆகனும்.''

''எனக்கும் புரியுது முத்தையா. ஆனா...''

''என்னய்யா?''

''சொன்னா... நீ என்மேலே கோவிச்சுக்கமாட்டியே''

''என்னய்யா இது? நான் எப்படி உங்கமேலே கோவிக்க முடியும்.''

''இல்ல முத்தையா... வந்து...''

''சொல்லுங்கய்யா!''

''என் சம்சாரம் ஏற்கனவே எனக்கு பொண்ணெல்லாம் பார்த்திட்டாளாம்.''

''அப்படியா!யாருய்யா அது''

''அது... உன் மூத்தமவ தேன்மொழிதான்''-பட்டென சொல்லிவிட முத்தையா திகைத்துப்போனார்.

''ஐ..யா''

''நானும் இப்படித்தான் பதறினேன். ஆனா அவ சொன்ன காரணங்களைக் கேட்கும் போது என்னால மறுக்க முடியல.''

''எ..ன்ன.. காரணம்?''

''ஒரு நிமிஷம் முத்தையா'' என்றவர் மேல்சட்டையைத் தூக்கிவிட்டு இடுப்பில் செருகியிருந்த பத்திரத்தை எடுத்து முத்தையாவின் கையில் வைத்தார்.

''ஐயா! என்ன இது?''

''உன் நிலத்து பேர்ல கடன் வாங்கியிருந்தே இல்ல. இது அந்தக் கடன்

பத்திரம். இதை நீயே கிழிச்சுப் போட்டுரு.''
''ஐ..யா!''
''இது சரசுவோட ஆசை முத்தையா. கொண்டா! நானே கிழிச்சிடு றேன்''-என்றவர் பத்திரத்தை சுக்கல்சுக்கலாய் கிழித்து எறிந்தார்.
முத்தையா மேலும் திகைத்துப் போய் நிற்க, அவரது தோள்பற்றி தன் னருகே அமரவைத்துக் கொண்டார்.
''முத்தையா! இது உன் விருப்பம் தான் முக்கியம். நான் உன்னை வற் புறுத்தமாட்டேன். ஆமா! உம்மகளுக்கு ஏதும் மாப்பிள்ளை பார்த்து வெச்சிருக்கியா?''
முத்தையாவின் கண்களுக்குள் ஆறுமுகத்தின் முகம் ஒரு கணம் வந்து போனது. கூடவே சிந்தாமணி கூட்டிவந்து வைத்துள்ள பெண்ணின் நினைவும் வர மறுப்பாய் தலையசைத்தார்.
ராஜதுரையின் முகம் சட்டென மலர்ந்தது. ''ஆமா! உன் ரெண்டாவது பொண்ணு நிறைய படிக்கணும்னு சொல்றாளாமே''
''அது... டீச்சருக்கு படிக்கணுமாம்.''
''தாராளமா படிக்கட்டும். நானே என் சொந்த செலவில படிக்கவெக்கி றேன். மொத்தம் உனக்கு அஞ்சுபிள்ளைக தானே?''
''ஆ..மா''
''எல்லாப் பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்குறது என் பொறுப்பு. எல்லாரும் படிச்சி ஆளானா எனக்கும் பெருமைதானே?''
முத்தையாவின் கண்களில் லேசாய் ஆசை துளிர்விட்டது. அதன் மீது தண்ணீர் தெளித்துவிட்டார் ராஜதுரை.
''உன் இடத்துல தண்ணி இருக்கா?''
''எங்கேய்யா? அடிக்கடி வத்திப்போயிடுது. ஒரு நாள் விட்டு ஒருநாள் தான் தண்ணீர் பாய்ச்சுறேன்.''
''என்ன முத்தையா நீ. ஒரு போர் போட்டுட வேண்டியது தானே?''
''ஐயோ! அது ஆகுமே முப்பதாயிரம்''
''நான் தர்றேன் முத்தையா! எத்தனை நாள் தான் கமலைமாட்டை கட்டிட்டு இழுப்ப. உனக்கும் வயசாகுதில்ல.''
''ஆமாங்கய்யா''
''நாளைக்கே போர் போட்டு ஒரு மோட்டாரையும் மாட்டிவிட்டுறேன். நீ பாட்டுக்கு ஸ்விட்சை தட்டிட்டு தண்ணீர் பாய்ச்சலாம். என்ன பயிர் வேணாலும் பருவம் செஞ்சுக்க''



முத்தையாவின் முகம் பளிச்சிட்டது. அவரது ஆசைப்பயிர் மளமள வென வளரத்துவங்கியது.
''ஐயா! பணம்... ரொம்ப செலவாகுமே நான் எப்படி திருப்பித்தரு வேன்?''
''பூச்! இந்தப் பேச்சே வரக்கூடாது. நான் உனக்கு கடனாத் தரல முத்தையா. இது என் கடமை.''
''ஐயா!''
''இதெல்லாம் சரசுவோட ஆசை முத்தையா அவன்னா எனக்கு உசிரு. அவ வார்த்தை தான் எனக்கு தெய்வவாக்கு''
முத்தையாவின் மனம் பாகாய் உருகியது. ஒரு நோயாளி மனைவி மீதே இப்புட்டு பிரியம் வைத்திருப்பவர் தன் மகளையும் பொன்னாய் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை வந்தது.
''ஊர்முழுக்க சொத்து கிடக்கு முத்தையா. ஆனா எனக்குப் பிறகு அதை கட்டியாள அனுபவிக்க ஒரு வாரிசு இல்லையே?''
''ஐயா!''
''நீயும் வயசுக்கு வந்த புள்ளைய எத்தனை காலம் தான் விட்ல வெச்சிருப்ப. தேன்மொழியை நான் கட்டிகிட்டா என் மொத்த சொத் துக்கும் அவதானே எஜமானி.
என் சொத்துகளுக்கும் வாரிசா உம் பேரப்புள்ளைக வந்தா உனக்கு பெருமைதானே? என்ன சொல்ற?''-ராஜதுரை கொக்கி போட்டு இழுக்க, முத்தையாவின் தலை தானாக சம்மதித்தது.
''தன்மகள் இந்த ஊரின் எஜமானி. தன் மகள் வயிற்றுப்பிள்ளை மச்சி வீட்டின் வாரிசு. தன் குழந்தைகளின் பசிபட்டினி எல்லாம் மறையப் போகிறது.
என் காய்ந்து போன பூமி குளிர்சோலையாகப் போகிறது. என் பிள்ளை

''தாலாட்டு நான் பாடினால் என் குழந்தை உடனே தூங்கிடும்''
''அப்படியாவது நீ பாட்டை நிறுத்தித் தொலைப்பேனு தான்டி குழந்தை தூங்குது!''
- அரவக்குறிச்சிப்பட்டி,
எம்.அசோக்ராஜா

கள் மூன்றுவேளையும் சோறு சாப்பிடப்போகிறார்கள். இதைவிட ஒரு தகப்பனுக்கு என்ன வேண்டும்?''

முத்தையா சம்மதமாய் தலையசைக்க, ராஜதுரை வந்த காரியம் வெற்றியடைந்ததில் திருப்தியாய் புன்னகைத்த நேரம், தேன்மொழி தோட்டத்தில் விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள்.

## 9

விறகை கட்டாய் கட்டி முடிந்து நிமிர்ந்த போது தேன்மொழியின் பார்வை தேடுதலாய் பக்கத்து தோட்டத்திற்கு சென்றது. வரிசையாய் நின்றிருந்த தென்னை மரங்கள் அசையாமல் இருக்க, ஆள் நடமாட்டமோ நீர் பாயும் ஓசையோ கேட்கவில்லை.

ஏமாற்றம் நெஞ்சை அடைத்தது. ''இன்றும் வர வில்லையா? எங்கே போய்விட்டான்? தந்தையின் மறைவிற்குப்பிறகு வேலைக்கு வரவேயில்லையே?

ஒருவேளை பதினாறு காரியம் முடிந்தபின் தான் வருவானா? இன்னும் நான்கு நாட்கள் காத்திருக்க வேண்டுமே''

ஏக்கமும் ஏமாற்றமுமாய் தோட்டத்தை விட்டுபார்வையை விலக்காமல் நின்றவளின் முதுகின் பின்னே முத்தையாவின் குரல் கேட்டது.

''அவன் வரமாட்டாம்மா''-பதறித் திரும்பினாள்.

''அ...அப்பா!''

''அவன் வரமாட்டாம்மா''


''என் மகள் 'பீச்' சுக்குப் போறேன்னு சொல்லி கண்டபடி சுற்றி கெட்டுப் போயிடக் கூடாதுனு என் வீட்டுக்குள்ளேயே பீச் மாதிரி ஒரு செட் போட்டுட்டேன்!''

-அரவக்குறிச்சிப்பட்டு, எம்.அசோக்ராஜா






''யா..ரு?''

''நீ யாரைத் தேடுறியோ அவன் வரமாட்டான்.''

''அ..ப்..பா!''

''அவனுக்கு இப்ப ஆயிரம் சொந்தம் இருக்கும்மா. நாமளோ... நம்ம கொடுக்கிற சாப்பாடோ அவனுக்கு தேவையில்லை'' முத்தையா ஒரு மாதிரியான குரலில் சொல்ல, தேன்மொழியின் இதயம் நடுங்கிற்று.

''அப்பா! என்னப்பா சொல்றீங்க?''

''இந்த பாசம் பந்தம் எல்லாம் வெறும் கானல்நீர் தாம்மா. அவரவர் வழியை பார்த்திட்டு போகும் போது நாமளும் போயிடணும். நின்று தேடக்கூடாது.''

''அப்பா!''

''கேள்விப்பட்டிருப்பியே. சிந்தாமணியோட தம்பி மவ இப்ப ஆறுமுகம் வீட்லதான் இருக்காளாம்''

''ஆ..மா!''

''அந்த பொண்ணு சும்மா வரல்லம்மா''

''பிறகு?''

''ஆறுமுகத்துக்காக பேசி முடிக்க கூட்டிட்டு வந்திருக்காக.''

''அப்பா''-வீறிட்டாள் தேன்மொழி. இதயம் பட்பட் என வெடித்துச் சிதறியது போலிருந்தது.

சுயநலம் சிலசமயங்களில் பொய் பேசவைப்பதுண்டு. முத்தையாவையும் பேச வைத்தது. மகள் மனம் ஆறுமுகத்தை வெறுத்து மறந்தால் தான் ராஜதுரையை ஏற்கும் என்பதால் தயங்காமல் சொன்னார்.

''நேற்று கூட அவன் வீட்ல போய் பேசிப்பார்த்தேன்.''

''என்னப்பா சொல்றீங்க?''

''ஆனா ஆறுமுகத்துக்குத்தான் கல்யாணம் முடிவாகிப் போச்சேன்னு சிந்தாமணி சொல்லிட்டாம்மா''

''எ..ன்..ன? ஆறுமுகத்தை பார்த்திங்களா?''

''அவனும் அங்கே தாம்மா இருந்தான். வாயே திறக்கல.''

''இல்ல. ஆறுமுகம் இதுக்கு ஒரு நாளும் சம்மதிக்காது.''

''உலகம் தெரியாத புள்ளையா இருக்கியேம்மா.''

''அப்பா!''

''காதுல கழுத்தில பொட்டுத் தங்கம் இல்லாத உன்னைக் கட்டிக்க அவன் எப்படி சம்மதிப்பான்?''

''எ..ன்..ன?''

"நகைநட்டோட கண்ணுக்கு லட்சணமா ஒரு பொண்ணு வீட்டோட இருக்கும் போது உன்னை வந்து பார்க்கணும்னு கூட அவனுக்கு தோணலையே. அவன் எப்படிம்மா உன்னைக் கட்டுவான்னு நம்புற?"

"அவன் போனாப் போறான் விடும்மா. உனக்கு எப்பேர்ப்பட்ட இடம் வந்திருக்கு தெரியுமா?"-முத்தையா உற்சாகமாய் பேச, ஒளியிழந்த கண்களால் தந்தையை ஏறிட்டாள்.

"ஆமாம்மா! நாம பட்ட கஷ்டத்தைப் பார்த்து அந்த ஆண்டவனே மனித உருவத்தில் ஒரு தெய்வத்தை நமக்கு அனுப்பியிருக்கு"

"அப்பா?"

"உன் தங்கை படிக்கணும்னு தானே கல்யாணத்தை தள்ளி போட்டுட்டு வந்தே?"

"ம்"

"இப்ப உனக்கு கல்யாணராசி வந்திடுச்சும்மா"

"என்ன?"

"நம்ம குடும்பத்துக்காக உன்னால விடிவு வரப்போகுது தேனு. உன் கனவு பலிக்கப் போகுது."

"என்னப்பா சொல்றீங்க?"

"பூவை படிக்க வெச்சு அவர் செலவுலயே டீச்சர் ஆக்கிடுவாராம். அதுமட்டுமில்ல அடுத்திருக்கிற மூனு புள்ளையையும் படிக்க வெச்சு பெரிய ஆளாக்குவாராம்"

"யாரு?"-குழப்பமாய்க் கேட்டாள்.

"அவரு தாம்மா. நம்ம தோட்டத்தில் மோட்டார் வெச்சித்தரேன்னு சொல்லிட்டார். கடனைக் கூட வேண்டாம்னு சொல்லிட்டா

"விடு பூட்டியிருந்தப்ப எப்படி கொள்ளையடிச்சே...!"

"அது தொழில் ரகசியம் தனியாச் சொல்றேன்...!"

-ஜே.தனலட்சுமி, கோவை





ரும்மா"-முத்தையா பேசிக்கொண்டே போக, தேன்மொழிக்கு ஏதோ புரியத் துவங்கியது.

பார்வையில் வெப்பம் ஏற வெடுக்கென நிமிர்ந்தாள்.

"யாரைச் சொல்றீங்க?"

"அதாம்மா மச்சிவீட்டுக்காரரு. அவருக்கும் அவர் பொஞ்சாதிக்கும் உம்மேல ரொம்பப் பிரியம். அந்த அம்மாவோட கடைசி ஆசை உன்னை மச்சிவீட்டுக்காரருக்கு கட்டி வெக்கணும்னு பிரியப்படுதாம். இந்த மாசத்துக்குள்ள உங்க கல்யாணத்தை முடிச்சிடணும்னு..."-அதன் பிறகு அவர் பேசியவை காதில் விழவில்லை. தலைசுற்றி செவிஅடைத்து மயங்கிச் சரிந்தாள் தேன்மொழி.

## 10

தூணோடு தூணாய் உறைந்து போயிருந்தாள் சிந்தாமணி. கண்கள் எங்கோ வெறித்துக் கொண்டிருக்க, கை கழுத்து, நெற்றி என அனைத்தும் வெறுமையாய் இருந்தவளைப் பார்க்கையில் நெஞ்சம் கனத்தது.

கண்கள் பனிக்க அவளை நெருங்கி மண்டியிட்டு அமர்ந்தான் ஆறுமுகம்.

"சின்னம்மா "மகனின் குரலில் சட்டெனத்திரும்பினாள். கண்கள் கலங்கியிருந்தது.

"என்ன சின்னம்மா இது? இன்னும் எத்தனை நாள் தான் அழுதிட்டே இருப்பீக? கொஞ்சம் சாப்பிடுங்க சின்னம்மா"

கண்களில் நீர் வழிய புன்னகைத்தாள் சிந்தாமணி.

"நீ என்னை சின்னமான்னு கூப்பிட்டதிலேயே வயிறும் மனசும் நிறைஞ்சு போச்சுப்பா."

"மன்னிச்சிடுங்க சின்னம்மா."

"எதுக்குப்பா?"

"நானும் சேர்ந்து உங்களை இத்தனை நாளா வேதனைப்படுத்தியிருக்கேனே."

"நீ சின்னப்புள்ளைய்யா உனக்கு என்ன தெரியும். பாவம்!"

"சி...சின்னம்மா"
"என்னப்பா?"
"ஏன் இப்படி காதுல கழுத்தில எதுவும் போடாம இருக்கீங்க பார்க்க சங்கடமா இருக்கு."
"இல்லய்யா! இதுதான் நம்மூர் வழக்கம்."
"அதுக்கில்ல"
"உன் அப்பா என்னை பொஞ்சாதியா நினைச்சாரோ இல்லையோ நான் அவரை புருஷனாத்தான் நினைச்சு வாழ்ந்தேன். அவரே போன பிறகு எனக்கெதுக்கு நகை நட்டு."
"சின்னம்மா!"
"மல்லி! அதை எடுத்திட்டு வாம்மா - சுவரோரமாய் நின்ற மல்லிகா தலையசைத்துவிட்டு அறைக்குள் நுழைந்து திரும்புகையில் கையில் சின்னதாய் ஒரு பொட்டலம் இருந்தது.
சிந்தாமணி அதை வாங்கி ஆறுமுகத்திடம் கொடுத்தாள்,
இந்தாப்பா! இது உனக்கு சேர வேண்டியது"
"என்னது சின்னம்மா?"
"பிரிச்சுப்பாரேன் "- என்றதும் அதைப்பிரித்தவனின் முகம் மாறியது.
"சின்னம்மா என்ன இது?"
"உன் அம்மாவோட நகைதான்யா. இதை இத்தினி நாளா நான் போட்டுகிட்டதே உன் அப்பன்கிட்ட இருந்து இதை மட்டுமாவது காப்பாத்தணுமேன்னுதான்.
என்கிட்ட பேசினாத்தானே என் நகைகளைக் கேட்க முடியும். அதனால அவர் எங்கிட்டவ கேட்கவும் இல்ல. நான் கொடுக்கவும் இல்ல."
"சின்னம்மா "ஆறுமுகத்தின் தொண்டையை துக்கம் அடைத்தது.
"மொத்தம் இருபத்தி ஆறுபவுன் இருக்கு. இதை வித்து கிழக்கால இருக்கிற தென்னந்தோப்பை மீட்டுடுய்யா."

> பொற்காசுகளைமழையாகபொழிந்தாலும்ஆசைகள்அடங்காமல் பெருகும்.
> -எம்.எஸ்.மயில், தூத்துக்குடி.




"சின்னம்மா"
"அதிலதான் உன் அம்மாவோட சமாதி இருக்கு. அதனால அதை மட்டும் மச்சிவீட்டக்காரர் கேட்டப்ப கிரயம் பண்ணிக்கொடுக்கல,வெறும் நாப்பதாயிரத்துக்குத்தான் அடமானம் வெச்சிருக்கு.
வட்டியோட சேர்த்து பணத்தைக்கொடுத்திட்டு தோப்பை திருப்பிடுய்யா. போய்யா மறக்காம பத்திரத்தை வாங்கியாந்திடு"
சிந்தாமணி சொன்னதும் கதறிவிட்டான் ஆறுமுகம். அவனது கண்ணீரைக் கண்டு பதறிப்போனாள்.
"எய்யா ராசா! ஏன்யா கலங்குற?"
"உன்னைப் போய் தப்பா நினைச்சி... வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிட்டேனே சின்னம்மா.. என்னை மன்னிப்பாயா?"
"என்னய்யா நீ எம்புள்ள தானே என்னைப்பேசினான்."
"சின்னம்மா"
"போய்யா! போய் ஆக வேண்டியதைக் கவனி"
கண்ணீரைத் துடைத்துவிட்டு நகைகளை ஆராய்ந்தான் எல்லாமே பழைய நகை. சுத்தத்தங்கத்தால் ஆனது.அதன் நடுவே தாலியும் இருந்தது.
கைகள் நடுங்க அதைக்கையில் எடுத்தான்.
"சின்னம்மா.!"
"என்னப்பா"
"இது.. இது மட்டும் உங்கிட்ட இருக்கட்டும்."
"ஏன்யா?"
"அம்மா நினைவா. உன் நினைவா இது வீட்லயே இருக்கட்டும். தேனுக்கு நான் கட்டப்போவது இந்தத்தாலிதான்" தாலியைப் பார்த்துக்கொண்டே அவன் சொல்ல, சிந்தாமணி கலக்கமாய் மல்லிகாவைப் பார்த்தாள்.
அவள் முகமும் கலங்கிப்போயிருக்க, ஆறுமுகம் அவளை அழைத்தான்.
"இங்கே வா"
"என்னத்தான்."
"இதோ பாரும்மா. நீ சின்னப்பொண்ணுடா. எனக்கு முப்பது வயசாகுது. நான் உனக்கு வேண்டாம். இன்னும் கொஞ்ச நாள் போகட்டும். நானே உனக்கேத்த மாப்பிள்ளையா பார்த்து சீரும் சிறப்புமா கல்

யாணம் பண்ணி வெச்கிறேன் சரியா?"
என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் அவள் சிந்தாமணியைப் பார்க்க, ஆறுமுகம் அவளிடம் திரும்பினான்.
"சின்னம்மா!"
"ம்?"
"உன் ஆசையை நிறைவேத்த முடியாத நிலைமையில இருக்கேன்."
ஆறுமுகம்?
"தேனுதான் எம்பொஞ்சாதின்னு எப்பவோ முடிவு பண்ணிட்டேன். மனசால அவகூட வாழ்ந்திட்டுதான் இருக்கேன். அவ இருக்கிற மனசில மல்லிகா மட்டுமில்ல வேற யாருக்குமே இடம் கிடையாது."
"எய்யா?"
"அப்பா உன்னை தண்டிச்ச மாதிரி என்னால இந்த பச்சையபுள்ளைய தண்டிக்க முடியாது சின்னம்மா. அது பாவமில்லையா?" ஆறுமுகம் கேட்டதும் வாயடைத்துப் போனாள் சிந்தாமணி.
"இது சின்னப்பொண்ணு. இன்னும் காலநேரம் இருக்கு. நல்ல மாப்பிள்ளையா பார்த்து தாவே."
"நான் வேணா ஊருக்கு போயிடட்டுமா அயித்தான்? நீ மகளா இருந்துக்க. உங்க ரெண்டு பேருக்கும் நான் உழைச்சு கஞ்சி ஊத்துறேன். என்ன சின்னம்மா?"
"மல்லி! நீ என்ன ஆத்தா சொல்ற?"
"எனக்கு உன்கூட இருந்தா போதும் அத்தை"
"போதும்யா. உன் அப்பன் போயி எனக்கு ஒரு புள்ளையையும் பொண்ணையும் தந்திருக்காரு. இது போதும்மா"
"சரி சின்னம்மா.. அப்ப நான் இந்த நகையை விற்க ஏற்பாடு பண்ணிட்டு வர்றேன்."
"வெளியே போய் விற்க வேண்டாம்யா. நேரே மச்சி வீட்டுக்காரனைப் போய் பாரு. கடன் தொகை வட்டியோட எவ்வளவு ஏறியிருக்குன்னு கேட்டு அதுக்குள்ள நகையை அவர்கிட்டயே கொடுத்திட்டு பத்திரத்தை வாங்கியாந்திரு."
"நகையை அவர் வாங்குவாரா சின்னம்மா?"
"ராக்கம்மாவோட தாலியையே வாங்கியிருக்கான் பாவி. இதை வாங்க மாட்டானா? போய் கொடுய்யா!"



"சரி மல்லி! நீ சின்னம்மாவுக்கு சாப்பிட ஏதாவது கொடு. நான் வந்திடுறேன்."
"சரி"
"சின்னம்மா"
"என்னய்யா"
"அப்பா இறந்ததுல இருந்து இன்னும் தேனைப் பார்க்கவே இல்ல. வரும்போது அவளை
பார்த்திட்டு வாய்யா. அவளுக்காக தாலி தயாரா இருக்குன்னு சொல்லிட்டு வா."
"ரொம்ப நன்றி சின்னம்மா -" சிந்தாமணியின் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றிக்கொண்டு எழுந்தான். கையில் இருந்த நகைகளை சட்டைக்குள் பத்திரப்படுத்திக்கொண்டு உற்சாகமாக புறப்பட்டான்.
பரம்பரை நிலம் அதுவும் தன் தாய் உறங்கும் இடம்மீண்டும் தங்களுக்கே சொந்தமாகப் போகிறது என்ற இன்பம் ஒருபுறம். தேனுக்கு தாலி தயார் என்று பச்சைக்கொடி ஆட்டிய சிந்தாமணியின் சம்மதம் ஒருபுறம் என ஆனந்த வெள்ளத்தில் நீந்தியவாறே அடுத்த தெருவில் இருந்த மச்சிவீட்டை அடைந்த போது வெளியே வந்து கொண்டிருந்தார் முத்தையா.
அவரைப்பார்த்ததும் உற்சாகமாகி மாமா என அவரை நெருங்க, அதைக் கவனியாதவர் போல வேகமாக விலகிச்சென்றார் முத்தையா.
மாமா! மாமா! என்னாச்சு இவருக்கு குழப்பமாய்த் திரும்பிய போது தான் அதைக் கவனித்தான்.



"என் பையனை வெட்டிட்டு வரச் சொன்னதுக்குக் கட்டிட்டே வந்துட்டான்..."
"அப்படியா...!"
"ஆமா...லவ் பண்ற பொண்ணை வெட்டிவிட்டு வரச் சொன்னதுக்கு..."
"கட்டிட்டே வந்துட்டான்...!"
-ஜே.தனலட்சுமி, கோவை

வீடு முழுக்க பந்தல் அலங்காரம் நடந்து கொண்டிருக்க. வாசலில் வாழைமரம் கட்டப்பட்டிருந்தது. குழப்பமாய் பார்வையைச் சுழற்றினான் ஆறுமுகம்.

வீட்டுக்குத் தேவையான பொருட்களை வண்டியில் கொண்டு வந்து இறக்கிக்கொண்டிருந்தார் மாரிச்சாமி. அவரை நெருங்கினான்...

''அண்ணே! மாரி அண்ணே!''

''யாரு? அட ஆறுமுகமா? என்னப்பா இந்தபக்கம்?''

''இல்ல ஐயாவைப் பார்க்க வந்தேன்.''

''அடடா! ஐயா வீட்ல இல்லையே?''

''எங்கே போயிருக்காங்க?''

''குல தெய்வத்துக்கு பொங்க வெச்சு பட்டு படைக்க போயிருக்காக. வர இருட்டிடும்.''

''பட்டு படைக்கவா?''

''ஆமாப்பா!''

''அண்ணே! வீட்ல.. எதுவும் விசேஷமா?''

''என்னப்பா இப்படிக்கேட்கிற? நீ ஊர்லதான் இருக்கிறியா இல்லையா?''

''இல்லண்ணே! அப்பா போனதும் கடன்காரங்க மொத்தமா வந்திட்டானுங்க. கடன் பத்திரம், வட்டி, இறப்பு சான்றிதழ்னு நாயா அலைய வெச்சிட்டானுக.''

''அடடா! அப்புறம் என்னாச்சு?''

''எல்லாமே சொத்து பேர்ல வாங்கின கடன்றதால நாலு பேரை வெச்சி பேசி வக்கீல் மூலமா எல்லாம் சரிபண்ணிட்டேன். இனி பிரச்சனையில்லை.''

''அப்படியா?''

''என்ன விசேஷம் அண்ணே?''

''அதை ஏம்ப்பா கேட்கிற?-'' என்றவர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு குரலைத் தழைத்துக்கொண்டார்.

''ஐயாவுக்கு நாளன்னிக்கு கல்யாணம்ப்பா''

''என்ன?'' திகைத்துப்போனான் ஆறுமுகம்.

''ஆமாப்பா. பத்திரிகை எதுவும் அடிக்காம எளிமையா பண்றாக.

''என்ன? அப்போ.. அந்த அம்மா?''

''ம். அவுகள நினைச்சாத்தான் மனசுக்கு வருத்தமா இருக்கு. ஆனா



நாம என்னப்பா செய்ய முடியும்?''

''என்ன அநியாயம் இது? இப்ப அந்த அம்மா எங்கே?''

''வீட்ல தாம்ப்பா இருக்குது'' - மாரிச்சாமி சொல்லி முடிப்பதற்குள் சரசரவென வீட்டுக்குள் நுழைந்தான். ஒவ்வொரு அறையாய்த்தேட, பூஜையறையில் கண்ணீரோடு அமர்ந்திருந்தாள் சரஸ்வதி.

''அம்மா!''

''யாரு?''- எனத் திரும்பியவள் ஆறுமுகத்தைக் கண்டதும் விழிகளைத் துடைத்தவாறே எழுந்தாள்.''

''வாப்பா ஆறுமுகம்''

''அம்மா என்னம்மா இதெல்லாம்''

''எதெல்லாம்?''

ஐயாவுக்கு கல்யாணம்னு சொல்றாங்களே.

''ஆமா! நாளை மறுநாள் காலையில'' சாதாரணமாய் சொன்னவளை அதிர்ச்சியாய் பார்த்தான்.

''அம்மா! என்னம்மா. இப்படி சொல்றீங்க? ''

''வேற என்னப்பா செய்யணும்?''

''நான் இருக்கும் போது எப்படி நீ இன்னொரு கல்யாணம் பண்ணலாம்னு அவர் சட்டையைப் பிடிச்சுக் கேளுங்கம்மா''

விரக்தியாய் சிரித்தாள் சரஸ்வதி. ''எப்பவோ பிடிச்சிருக்கணும். காலம் கடந்து போச்சுப்பா.''

''எப்படியாம்மா? அன்னிக்கு வந்த வரன் தட்டிப் போச்சுன்னு தேனு சொன்னாளே! இப்ப எப்படி?''

''யாரு சொன்னா?''

''தேனு. தேன்மொழி''

''அவதான். அந்தச்சண்டாளிதான் என் தாலிய பங்குபோட வந்திருக்கா ஆறுமுகம்.'' சரஸ்வதி கண்ணீரும் கோபமுமாய் சொல்ல, ஆறுமுகத்திற்கு சட்டென புரியவில்லை.

''அம்மா?''

''அவளை எம்புள்ளையா நினைச்சேன். ஆனா இந்த சொத்துக்கும் பணத்துக்கும் ஆசைப்பட்டு எனக்கே சக்களத்தியா வரப்போறா. நான் என்ன செய்வேன்?''

''எ..ன்..ன?''- ஆறுமுகத்தின் காலடியில் பூமி நழுவியது.

# 11

அடுக்களையில் சுருண்டிருந்தாள் தேன்மொழி. அடுப்பில் விறகுகள் எரியாமல் புகைந்து கொண்டிருக்க, அதைப்பற்றிய உணர்வின்றி உயிரற்ற சடலமாய் கிடந்தாள்.

அழுது அழுது கண்ணீர் மொத்தமாய் வற்றிப்போயிருக்க, சருகாய் உலர்ந்திருந்தாள். ஒரு வாரமாய் வீட்டிற்குள்ளேயே அடைந்து கிடந்ததில் உருத்தெரியாமல் மாறியிருந்தாள்.

பெற்றவரின் கண்ணீர் கெஞ்சல், ஆறுமுகத்தின் பாராமுகம், தம்பி தங்கைகளின் எதிர்காலம் என அனைத்தும் அவளை முடக்கிப்போட, மூச்சு மட்டுமே வந்து கொண்டிருந்தது.

க்ளிங்.. க்ளிங்- வெளியே சைக்கிளின் மணியோசை கேட்டும் அவளிடம் அசைவில்லை. எத்தனை நாள்தான் ஏமாறுவது?

க்ளிங்.. க்ளிங்.. இம்முறை அழுத்தமாய் மணி ஒலிக்க, சட்டென எழுந்தமர்ந்தாள். இது. இது நிச்சயமாய் ஆறுமுகத்தின் சங்கேத மொழிதான்.

உயிர் வற்றிப்போயிருந்த உடலில் திடீரென உற்சாக ஊற்று பீறிட்டு எழ சடாரென எழுந்தாள். மறுகணமே தந்தையின் கண்ணீர் நினைவிலாடியது.

''உன் முடிவுலதாம்மா நம்ம குடும்பத்தோட எதிர்காலமேம இருக்கு. அவனே உன்னை மறந்திட்டு அவன் வழியைத் தேடிட்டு போனபிறகு நீ ஏம்மா அவனை நினைச்சு கலங்குற?

எனக்காக வேண்டாம்மா. உன் தம்பி தங்கைக்காக இந்த வாழ்க்கையை ஏத்துக்கம்மா. இந்த கையாலாகாத தகப்பனால் வேற என்னம்மா செய்ய முடியும்? புரிஞ்சுக்க தாய்''- அன்று கைகளைப் பற்றிக் கொண்டு கதறினாரே

இறுகிப்போய் நின்றவளை அசைத்தாள் பூங்குழலி

''அக்கா!''

''ம்?''

''ஆறுமுகம் மாமா வந்திருக்கு''

''நான் வீட்ல இல்லன்னு சொல்லு''



''அக்கா?''

''இல்லேன்னு சொல்லு. போ -'' தங்கையை விரட்டிவிட்டு அடுக்களை கதவை பூட்டிக்கொண்டு கதவில் சாய்ந்தமர்ந்து கண்ணீரைச் சிந்தினாள். வெளியே ஆறுமுகத்தின் ஆவேசக்குரல் கேட்டது.

''எங்கே அவ?''

''மாமா!. அக்கா.. அக்கா..- பூங்குழலி பொய்சொல்ல தயங்கி அடுக்களையைப் பார்க்க, வேகமாய் அங்கு வந்து நின்றான்.''

''தேனு! கதவைத்திற''

அழுகையை நிறுத்திவிட்டு அழுத்தமாய் அமர்ந்து கொண்டாள்.

''தேனு! கதவைத்திறன்னு சொன்னேன்.''

''முடியாது.''

''ஏன்? என் முகத்தைப் பார்க்க துணிச்சல் இல்லையா?''

''நான் ஒன்னும் கோழை இல்ல''

''ஆமாண்டி நீ கோழை இல்லதான். எதுக்கும் துணிஞ்சவதான். அதான் நாற்பத்தி ஏழு வயசு கிழட்டு பயலைக் கல்யாணம் பண்ணப் போறியா?'' ''அது என் சொந்த விஷயம். இதுல யாரும் தலையிட வேண்டாம்'' - அழுத்தமாய் பதில்வர ஆறுமுகத்தின் கோபம் தலைக்கேறியது.

''எதுடி சொந்த விஷயம்? ஒரு பொண்ணோட வாழ்க்கையை பங்கு போடுறதா? முதல்ல வெளியே வாடி.

''நான் யார் வழியிலயும் குறுக்கிடல யாரும் என் வாழ்க்கையில தலையிட வேண்டாம்.''

''தேனு! என்ன பேசற நீ. சரசக்கா மேலே எம்புட்டு பிரியமா இருந்தே. இப்ப அவுகளுக்கே துரோகம் பண்ண உனக்கு எப்படி மனசு வந்தது? துரோகத்தைப் பத்தி நீ பேசாதே.''

''அந்த டாக்டர் பத்திரிகை விளம்பரம் மாதிரி ஆகிட்டார்''
''எப்படி...?''
''அதிக நோயாளிகள்... அதே விலை''
-ஜெ.தனலட்சுமி, கோவை



"தேனு!"

"போயிடு. உன்னைப்பார்க்கவோ உன்பேச்சைக் கேட்கவோ நான் தயாரா இல்ல. போ போயிடு." தேன்மொழி கத்த, கோபமாய் கதவை எட்டி உதைத்தான் ஆறுமுகம்.

அவனது கோபத்தில் குழந்தைகள் மிரண்டு பூங்குழலியை கட்டிக் கொள்ள, மூவரையும் அணைத்துக்கொண்டே ஆறுமுகத்தைப் பார்த்தாள்.

"மாமா! என்ன இது? ஏன் இப்படி கோபப்படுறீங்க?"

"பூவு! நீயே சொல்லு.. உன் அக்கா எடுத்த முடிவு சரியா? இது பாவமில்லையா?"

"மாமா"

"பூவு உன்னை நான் படிக்க வைக்கிறேன். இந்தப் புள்ளைகள எம்புள்ளையா பார்த்துக்கிறேன். உங்கஅக்கா கிட்ட சொல்லு. முதல்ல கதவைத்திறக்கச் சொல்லு.. நான் அவகிட்ட பேசணும்."

"அ..க்கா.!"

"பூவு.. அவனுக்காக நீ பரிஞ்சிட்டு வராதே! இத்தனை நாளா எங்கே போனாருன்னு கேளுடி.."

"தேனு அப்பா இறந்தது தான் உனக்குத் தெரியுமே.. கடன் வாங்கினவனெல்லாம் சேர்ந்து என்னை போலீஸ்ல பிடிச்சுக் கொடுக்கிற அளவுக்கு போயிடுச்சி.

பெரும்பாடுபட்டு போராடி நேற்று தான் மீண்டிருக்கேன். இன்னிக்குத்தான் உன்னைப் பார்க்கணும்னு கிளம்பினேன். அதுக்குள்ள இந்த சேதிகேட்டு துடிச்சுப் போயிட்டேன். வெளியே வா தேனு."

ஆறுமுகத்தின் கெஞ்சலில் அமைதியானாள். அப்பா இதையெல்லாம் சொல்லவில்லையே? தயக்கமும் குழப்பமுமாய் கதவில் கைவைத்த

"திருடுறதை விட்டிட்டு, அதற்கு இணையா வேறு தொழில், பண்ணப்போறதா சொன்னியே என்ன தொழில் செய்ய போறே?"
"அரசியல்வாதி ஆகப்போறேன்"
-ஜி.சண்முக குமார், திருச்சி







நேரம் முத்தையாவின் குரல்கேட்டது.
"என்னப்பா வீட்ல, ஆம்பளை இல்லாத நேரம் நீ வந்து என்ன கலாட்டா பண்றே?"
"மாமா! நான்"
"இதோ பாருப்பா, இரண்டு நாள்ல கல்யாணமாகப் போகிற பொண்ணுகிட்ட ஏதையாவது பேசி மனசை மாத்தலாம்னு வந்தியா?"
"மாமா! என்னாச்சு உங்களுக்கு? அந்த ஆளு ஒரு அயோக்கியன். அவனுக்குப் போயி.."
"நீ யோக்கியனா?"
"மா..மா?"
"வீட்ல ஒரு பொண்ணை பார்த்து வெச்சிட்டு இப்படி இன்னொருத்தருக்கு நிச்சயமான பொண்ணுகிட்ட தகராறு பண்ணினா என்ன அர்த்தம்?"
"ஐயோ மாமா! அது ஒரு சின்னப்புள்ள, என் சின்னம்மாவோட.."
"ஆமா! உன் சின்னம்மாவோட.. ஏற்பாடுதான் எனக்குத் தெரியுமே. மாமா! தயவு செய்து என்னை பேசவிடுங்க."
"இதோ பாருப்பா, உம்மேல கொஞ்சம் மரியாதை இருக்கிறதால தான் பொறுமையா பேசிட்டு இருக்கேன். தயவு செய்து வெளியே போயிடு."
"மா..மா"
"உனக்கு எத்தனையோ நான் சோறுபோட்டிருக்கேன். அந்த நன்றி விசுவாசம் இருந்தா.." என்று வெளியே கை, காட்டியவரைப் பார்த்து மொத்தமாய் தளர்ந்து போனான் ஆறுமுகம்.
"போயிடுறேன் மாமா. ஆனா நீங்க செய்யுறது பாவம். நீங்க வெள்ளந்திதான். அதை வெச்சு ராஜதுரை உங்களை நல்லா ஏமாத்தியிருக்கான்."
"வெளியே போப்பா."
"போறேன். நான் பழகினது நேசிச்சது எல்லாம் சாதாரண ஒருவிவசாயி மகனை. ஆனா நீங்க மச்சிவீட்டுக்காரனோட சம்பந்தியாச்சே, உங்க கிட்ட என்ன பேசறது? நான் போறேன்."
அடியேய் தேனு! உங்கப்பா ஏமாந்தது தப்பில்லடி
ஆனா தெரிஞ்சே போய் நெருப்பில விழுறியே. அதைத்தாண்டி என்னால தாங்க முடியல- ஆறுமுகத்தின் கண்கள் கலங்க, தேன்



மொழி விம்மினாள்.
"நீ என் உசிருடி. உனக்காக தாலியெல்லாம் ரெடி பண்ணிட்டேன்டி. சின்னம்மாவோட சம்மதத்தோட எம்புட்டு சந்தோஷமா வந்தேன் தெரியுமா?
எல்லாத்திலயும் நெருப்பை அள்ளிக்கொட்டிட்டியே.. போடி.. போ. அவனையே கட்டிக்க.. சொத்து பத்தோட வந்த சரசம்மாவுக்கே இந்த கதின்னா உனக்கு?
அவன் ரொம்ப விவரமாத்தான் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கான். நீ சுசந்திட்டா உன்னை ஒதுக்கிட்டு உன் தங்கச்சிகளைக் கட்டிக்கலாமில்ல"
"மாமா "- பதறினாள் பூங்குழலி
"பூவு! நான் சொல்றதுதாம்மா நடக்கப்போகுது. உன் அப்பன் உங்க எல்லாரையும் மொத்தமா அந்த அரக்கனுக்கு பலி கொடுக்கப்போறாரு."
அறைக்குள் இருந்த தேன்மொழியின் இதயம் பதறியது. முத்தையா கூட விக்கித்துப் போனார்.
"உன் அப்பனுக்கு தோட்டக்காட்ட விட்டா என்ன தெரியும். கூடவே பழகின எம்மனசு புரியல. பெத்து வளர்த்த மக மனசு புரியல. ஊரைக் கெடுக்க வந்தவனைப் பத்தி புரியுமா?
எப்படியோ போங்க. ஆனா ஒன்னுடி. அந்தம்மா அழுததுடி. அந்தக் கண்ணீரு உன்னைவாழவிடுமா. சொல்லுடி"
இப்போது தேன்மொழி இன்னும் பலமாய் அதிர்ந்தாள். சரசக்கா அழுதாளா? அவளுடைய கடைசி ஆசை என்று தானே அப்பா சொன்னார்?

"எப்பவும் சட்டசபைக்கு தானே போட்டி போடுவீங்க? இப்ப ஏன் பார்லிமெண்டுக்கு போறீங்க?..."
"சட்டசபையில் வெளிநடப்பு செஞ்சு போரடிச்சிடுச்சு பார்லிமென்டில் செய்ய ஆசையா இருக்கு..."
-ராஜிராதா, பெங்களூர்



முத்தையாவும் இதே நிலையில் தவிக்க, ஆறுமுகம் வெளியேறத்தயாரானான்.

''போவ் மாமா! உன்னை என் அப்பனா நினைச்சிருந்தேன்யா. பணத்தைக் கண்டதும் நீயும் மாறிட்ட இல்ல? உன்னோட சுயநலத்துக்காக பெத்த பொண்ணையே அடமானம் வெச்சிட்ட இல்ல?
நீயெல்லாம் ஒரு மனுஷன்? ச்சீ! பெத்த புள்ளைக வளர்க்க துப்பில்லாதவன் எல்லாம் ஏன்யா புள்ளைகள பெத்துக்கிறீங்க?''

மாமா..

''சரிம்மா! பேசல.. நான் போயிடுறேன்.தேனு''

இந்தப்புள்ளையோட படிப்பைக்காரணம் காட்டி தானேடி என்னை ஒதுக்கின? இப்பத்தானே புரியுது. நீ எதுக்கு என்னைத் தட்டிக்கழிச்சேன்னு.

போறேன்டி. இனி உசிரே போனாலும் உன் முகத்தில முழிக்கமாட்டேன்டி. உன் தலையில என்ன எழுதியிருக்கோ அப்படியே நடக்கட்டும். தயவு செய்து இந்தப்புள்ளைகளையும் காவு கொடுத்திடாதே''
கைகளை அடித்து கும்பிட்டான்.

அதற்கு மேலும் உள்ளே இருக்க முடியாமல் கதவை திறந்து தேன்மொழி விம்மலோடு வெளியே வர. ஆறுமுகம் வாசலைத்தாண்டி போயிருந்தான்.

## 12

தலையணையில் முகம் புதைத்து விசும்பிக் கொண்டிருந்த தேன்மொழியை உலுக்கினாள் பூங்குழலி.

''அக்கா! எழுந்திரு. சீக்கிரம்.''

''என்னடி?''

''அப்பாவும் அந்த ராஜாதுரையும் எங்கேயோ கிளம்பிப் போறாங்க. இது தான் சரியான சமயம். வாபோலாம் - பூங்குழலி அவசரப்படுத்த நடுக்கமாய் எழுந்தாள் தேன்மொழி.

''பூ.. வு!''



''என்னக்கா?''

''இது சரியா வராதுடி.''

''ஏன்? நேத்து முழுக்க படிச்சு படிச்சு சொன்னேனே. இப்ப என்ன? பயமா இருக்குடி.''

''ஏங்க்கா பயப்படுற? நீ என்ன ஊரை விட்டா ஓடப்போற? வா என் கூட.''

''இல்லடி! நான் பேசினா சரசக்கா கேட்குமா?''

''அவங்க வாழ்க்கை மேலே அவங்களுக்கும் அக்கறை இருக்குமில்ல? புரிஞ்சுப்பாங்க. வா.''

''ஒரு வேளை.. அந்த ஆளுகிட்ட சொல்லிட்டா.''

''ஏங்க்கா இப்படி முட்டாளா இருக்க? தன்னோட வாழ்க்கைய பங்கு போட வந்தவ விலகிட்டா சந்தோஷப்படுவாங்களா? போட்டுக் கொடுப்பாங்களா?''

''அப்படியா சொல்ற?''

''முதல்ல வா நீ. சீக்கிரமா போய் நான் சொன்ன மாதிரியே பேசு என்ன?''

''ஏய்! அப்ப நீ வரலையா?''

''ரெண்டு பேருமாச் சேர்ந்து கதவைப்பூட்டிட்டு போனா ராஜதுரை ஆளுக எவனாவது பார்த்தா சந்தேகம் வரும். நான் வீட்ல இருக்கேன். நீ கிளம்பு.''

''பூவு? தயங்கி நின்றாள் தேன்மொழி.''

''என்னக்கா?''

''எனக்கு பயமா இருக்குடி.''

''என்ன பயம்?''

''இல்ல.. நான் எப்படி தைரியமா பேசப்போறேன்! ஏன்? நேத்து ஆறுமுகம் மாமாகிட்ட பேசலியே அதை மாதிரி பேசு.''

பூவு! உன் படிப்பு..

''அக்கா! எங்க டீச்சர் ஸார் எல்லாருக்கும் என்னை பிடிக்கும். நான் நிறைய மார்க் எடுத்தா அவங்களே செலவு பண்ணி படிக்க வெக்கிறேன்னு சொல்லியிருக்காங்க.
நிச்சயமா நான் ஸ்டேட் பர்ஸ்ட் வந்திடுவேன். என் படிப்பைப்பத்தி நீ கவலைப்படாதக்கா. இப்ப உன் வாழ்க்கை தான் முக்கியம். போ! நான் ஆறுமுகம் மாமாவை அங்கே வரச்சொல்லியிருக்கேன்.''

"பூ...வு!"

"எங்களுக்காக தியாகம் பண்றதா நினைச்சிட்டு உன் வாழ்க்கையை அழிச்சிடாதே. இப்ப தியாகமா தெரியுறது.
கொஞ்சநாள்ல உனக்கு நரகமாகிடும். நீ வேதனைப்படுறத பார்த்தா எங்களால தாங்க முடியுமா?"

"போக்கா! போய் சரசக்கா கிட்ட பேசு. அவங்களால மட்டும் தான் இந்தக்கல்யாணத்தை நிறுத்த முடியும்." போ இளையவள் விரட்ட, தீர்க்கமான முடிவுடன் மனதை திடப்படுத்திக்கொண்டு நடக்கத்தொடங்கினாள்.

என்னென்ன பேச வேண்டும் என மனதிற்குள் பார்த்துக் கொண்ட ஒத்திகையெல்லாம் படுக்கையில் கிடந்த சரஸ்வதியைக் கண்டதும் காணாமல்போனது.

சரசக்கா என பதட்டமும் கண்ணீருமாய் நெருங்கியவளைக் கண்டதும் வெறுப்பாய் திரும்பிப்படுத்துக்கொண்டாள் சரஸ்வதி.

"அக்கா! தேனு வந்திருக்கேன்."

"நான் இன்னும் குருடியாகிடல"

"அக்கா?"

"கூப்பிடாதடி சண்டாளி! அக்கா அக்கான்னு என் தாலியையே பங்கு போட வந்திட்டியே."

"ஐயோ இல்லக்கா! சாமி சத்தியமா நான் உங்களுக்கு துரோகம் பண்ண மாட்டேன்."

"போதும்டி. நடிக்காதே. விடிஞ்சாக்கல்யாணம். அதுக்குப்பிறகு நீதானே இந்த வீட்டு மகாராணி. இன்னிக்கே ஏன் வந்திட்ட?"

"சரசக்கா! எனக்கு நின்னு பேச நேரமில்ல. உங்க புருஷன் வர்ற துக்குள்ள உங்ககிட்ட நான் பேசணும். கண்ணீரோடு சரஸ்வதியின்

"பில்லா-2, சிங்கம்-2 னு எடுக்கறத பார்த்துட்டு"
"என்னசொல்றார்... தலைவர்!"
"ஸ்பெக்ட்ரம்-2 பண்ணலாமானு கேக்றார்..."
-பர்வீன் யூனுஸ், குரோம்பேட்டை





காலைக்கட்டிக் கொண்டாள்."

பூங்குழலி எதற்காக தன்னை இங்கே வரச்சொன்னாள்? குழப்பத்தோடு வந்து கொண்டிருந்த ஆறுமுகத்தின் கண்களில் இந்தக்காட்சி விழ, திகைத்துப்போனான்.

தேன்மொழியின் கண்ணீரைக் கண்டு மனம் பதறினாலும் இருவரின் பேச்சையும் தடை செய்ய விருப்பமின்றி வாசலருகே ஓரமாய் நின்று கொண்டான்.

சடக்கென எழுந்து அமர்ந்தாள் சரஸ்வதி. ச்சீ! காலை விடு.

"அக்கா! தயவு செய்து நான் சொல்றதை."

"போதுடி! சதிகாரி! உன்னை என் புள்ளையா நினைச்சேனே! எழுமையிலும் எதுக்கும் ஆசைப்படாத உத்தமின்னு சொல்வேனே. பாவி! பாவி!

கடைசியல என் குடியை கெடுத்திட்டியே. உனக்கு பணம் காசுதான் வேணும்னா என்கிட்ட கேட்டிருக்கலாமே? அள்ளித்தந்திருப்பேனே! அதைவிட்டுட்டு இப்படி உடம்பை வித்து சம்பாதிக்கிற மாதிரி."

"அக்கா - கிறீச்சிட்டாள் தேன்மொழி. கண்ணீர் நின்று விட, ஆக்ரோஷமாய் சரஸ்வதியின் அருகே வந்தாள்.

"நானும் உன்னை என் தாயாத்தான் நினைக்கிறேன். அதான் உங்கிட்ட நியாயம் கேட்டு வந்திருக்கேன்."

"நியாயமா? எங்கிட்டயா?"

"ஆமா! நீ செய்தது நியாயமா?"

"ஏய்! என்னடி? நான் என்ன பண்ணினேன்?"

"உன் சுகவீனத்தை காரணம் காட்டி அந்தாளு எவளோ ஒருத்தியைக் கட்டிக்க நினைச்சதையே கேட்டு கொதிச்சவ நான். ஆனா நீ என்னையே அந்த பாவத்தை பண்ண வெச்சிட்டியே"

"ஏன்!"

"நீ சொன்ன வேலையைச் செய்யுற கூலிக்காரி தான் நான். அதுக்காக எனக்கும் மனசு இருக்கு. அதில ஆசா பாசம் இருக்கும்னு யோசிக்காம என்னை பலி கேட்டுட்டியே. இது என்ன நியாயம்?"

கண்ணீரும் வேதனையுமாய்க் கேட்டவளை குழப்பமாய் பார்த்தாள் சரஸ்வதி.

"என்னு? நீ என்ன சொல்ற?"

"அந்த ஆளால தான் நீ இப்படி உருக்குலைஞ்சி போனேன்னு எனக்

குத்தெரியும். பிறகு எப்படிக்கா நீ என்னை பலிகொடுக்கத் துணிஞ்ச? தேனு?''

''கஞ்சிக்கு வழியத்தவ. நாம எது சொன்னாலும் தலையாட்டிடு வான்னு நினைச்சியா?''

''ஏய்! தேனு! நான் உன்ன என்ன செய்தேன்?''

''இது உன்னோட கடைசி ஆசையாமே. நீதான் உம்புருஷன்கிட்ட என் னைக் கட்டிக்க சொன்னியாம்.''

''எ..ன்..ன?'' உடல் அதிர எழுந்து நின்றாள் சரஸ்வதி. ஆறுமுகம் அதை விட பலமாய் அதிர்ந்து போனான். வாய் உலர்ந்தவளாய் தேன் மொழியின் தோளைப் பற்றிக் கொண்டாள்.

''தேனு! நீ என்ன சொல்ற?''

''உம்புருஷன் அப்படித்தான் வந்து என் அப்பன்கிட்ட சொன்னாரு. என் அப்பனும் உனக்காகத்தான்..''

''இல்ல. இல்லடி நான் எப்படி இந்த காரியத்தை செய்வேன்? உம் மனசில ஆறுமுகம் இருக்கான்னு எனக்கும் தெரியுமே!''

''அதாங்கா உன்னைத்தேடி வந்தேன். என் மனசுல எப்படியும் ஆறு முகம் தான் இருக்கு. இந்த உடம்பு மனசு எல்லாமே அவனுக்குத்தான் அவனைத் தவிர வேறு எவன் தொட்டாலும் நான் பொணமாகிடு வேன்.''

''தேனு!'' சரஸ்வதி பதறிப்போனாள். உடலும் உள்ளமும் அதிர உறைந்தே விட்டான் ஆறுமுகம்.

''அக்கா! உன்கிட்ட கையேந்தி வந்திருக்கேன். எப்படியாவது இந்தக் கல்யாணத்தை நிறுத்திடுக்கா.''

''நானா? நான் எப்படி?''

''எனக்கு வேற வழியே இல்லக்கா. என் சந்தோஷம் தான் பெரிசுன்னு என்னால ஆறுமுகம் கூட போகவும் முடியாது. என் அப்பனை நோக டிக்கவோ உம்புருஷனை எதிர்க்கவோ முடியாது.''

நீதான் எப்படியாவது என்னைக்காப்பத்தனும் ஆறுமுகத்தைத் தவிர வேற யார் என் கழுத்தில தாலிகட்டினாலும் மணவறையிலேயே நான் பொணமாகிவிடுவேன்.

''ஏய்! என்னடி சொல்ற?''

''நான் சொல்றது சத்தியம்! இதோ பார்த்தியா? என்றவாறே செருகி யிருந்த முந்தானையை உருவி அதில் போடப்பட்டிருந்த முடிச்சை



அவிழ்த்தாள் தேன்மொழி.''

அதில் பெரிதாய் நான்கு அரளிக்காய்கள் இருக்க அரண்டு போனாள் ச ரஸ்வதி.

''தே..னு! இ..து..''

''அரளிக்காய். நாளைக்கு காலையில உம்புருஷன் என் கழுத்தில தாலி கட்டுறதுக்குள்ள இதை மென்னு தின்னுட்டு உசிரை விட்டுடுவேன். இது என் ஆத்தா மேலே சத்தியம்.''

''ஐயோ!'' சரஸ்வதி பதறி காதை மூடிக்கொள்ள, பொங்கிய கண்ணீ ரோடு தேன்மொழியை நெருங்கினான் ஆறுமுகம்.

''அப்படியெல்லாம் உன்னை சாகவிடமாட்டேன் தேனு'' தழுதழுப் பாய் ஒலித்த குரலில் சரேலெனத் திரும்பியவள் ஆறுமுகத்தைக் கண் டதும் கேவலோடு கட்டிக் கொண்டாள்.

அவனது நெஞ்சில் சாய்ந்து முட்டி மோதி அவள் கதற, சரஸ்வதி மௌனமாய் கட்டிலில் அமர்ந்தாள்.

இவர்களது நேசம் உண்மை. தேன்மொழி சொன்னது அனைத்தும் உண்மை. அப்படியென்றால் தன்னை ஏமாற்றியது தன் கணவன் தான்.

அவனது கேடுகெட்ட ஆசைக்கு இந்த சிறு பெண்ணை பலியாக்கு வதா? இன்னொரு சரஸ்வதியை நானே உருவாக்குவதா? கூடாது. கூடாது.

உன்னைக் காப்பாத்துறதுக்காக அவனை நான் கொலை கூட செய் வேன் தேனு. அழாதேடி ஆறுமுகத்தின் வார்த்தையில் சுருக்கென நிமிர்ந்தாள் சரஸ்வதி. அவளது கண்கள் திகைப்பாய் யோசனையாய் விரிந்தது.

''நான் மந்திரியானால்...! ன்ற தலைப்புல என் மகன் எழுதின கட்டுரைக்கு முட்டை மார்க் போட்டுங்களாமே!''

''பின்னே! நான் மந்திரியானால் எது எதுக்கு யார் யார்கிட்டே எவ்வளவு லஞ்சம் வாங்குவேன். வேண்டாதவங்களை எல்லாம் எப்படி போட்டுத் தள்ளுவேன்னு விலைவாரியா எழுதியிருக்கான்''

-அரிசி ஸ்ரீராம், சாத்தூர்



# 13

மறுநாள் விடியும்போதே ஊர் முழுக்க காட்டுத்தீ போல் அந்த செய்தி பரவியது.

மச்சிவீட்டுக்காரர் சம்சாரத்தோட செத்துக்கிடக்கிறாம்டா- என்ற ஓலத்தால் திடுக்கிட்ட எழுந்தாள் தேன்மொழி.

விடிய விடிய கலக்கமும் சங்கடமுமாய் விழி மூடாமல் கிடந்தவளின் காதில் விழுந்த சேதில் துடித்துப்போனாள். முத்தையாவும் விதிர்வி திர்த்துப்போய் நின்றார்.

சரசக்கா- கதறிக்கொண்டே ஓடினாள் தேன்மொழி. அவளுக்கும் முன்பாய் ஊராரோடு அங்கே நின்றான் ஆறுமுகம். ஊர்மொத்தமும் வீட்டிற்குள் நுழைந்து கண்ட காட்சியில் உறைந்து போய் நிற்க, தேன் மொழி அனைவரையும் விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.

பெரிதாய் இருந்த படுக்கையறையின் பளிங்குத்தரையில் கோணல் மாணலாய் கைகால்களை பரப்பிக் கொண்டு மல்லாந்திருந்தார் ராஜ துரை. தொப்பை வயிறு மேலும் ஊதிப்போயிருக்க, வாயில் நுரை தள்ளி உயிரை விட்டிருந்தார்.

தேன்மொழியின் விழிகள் தெறித்து விடுவதைப்போல் விரிந்தது. கலக்கமாய் பார்வையைத்திருப்பினாள். சரசக்கா எங்கே?

சரஸ்வதி படுக்கையில் ஒருக்களித்துப்படுத்திருந்தாள். தலைகலை யாமல் சூடியிருந்த மல்லிகை வாடாமல் நெற்றியிலிருந்த குங்குமம் பிசிறாமல் அமைதியாய் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போல் படுத் திருந்தாள்.

கடைவாயோரம் இரத்தக்கோடு வழிந்து உறைந்து போயிருக்க, நெஞ் சிலறைந்து கதறிக்கொண்டே ஓடிச்சென்று அவளது காலைக்கட்டிக் கொண்டாள் தேன்மொழி.

''ஐயோ! சரசக்கா! என்னைக்காப்பாத்த உன் உசிரையே விட்டுட்டியா? ஐயோ! உன்னை நானே கொன்னுட்டேனே, பாவி!'' நான் பாவி! தலை யில் அடித்துக் கொண்டு அரற்றியவளை கண்ணீரோடு அணைத்துக் கொண்டான் ஆறுமுகம்.



''ஆறுமுகம்! பார்த்தியா! நேத்து வரைக்கும் நடமாடிட்டு இருந்த தெய்வம் இன்னைக்கு என்னால சாஞ்சிடுச்சே.''

''இல்லம்மா! என்னிக்கு இந்த சண்டாளப்பாவி இன்னொரு கல்யா ணத்துக்கு தேதி குறிச்சானோ அப்பவே நம்ம அம்மாவோட உசிர்போ யிடுச்சி. இவன் தான்.. இவன் தான் என் தாயை கொன்னுட்டான்.'' மாரிச்சாமி குலுங்கி அழ, ஊர்மொத்தமும் அவன் பக்கம் திரும்பியது.

மாரிண்ணே! நேத்து கூட நல்லா பேசினாங்களே! எப்படி இது?

ராத்திரி ஒரு ஒன்பது மணி இருக்கும்யா. அம்மா என்னைக்கூப்பிட்டு இதோ இந்த பத்திரந்தாள்களை எல்லாம் தந்தாக-என்றவாறே மேசை மீது இருந்த பேப்பர் கட்டைக் காட்டினார்.

''என்ன இது?''

''ஐயா கிட்ட இதை வெச்சு கடன்வாங்கினவங்க கொடுத்த நிலப்பத்தி ரம்யா.''

''என்ன?'' கூட்டத்திற்குள் சலசலப்பு கூடியது.

''மாரி! காலையில ஊரே நம்ம வீட்டுவாசல்ல வந்து நிற்கும். அப்போ நீ இதை உரியவங்ககிட்ட கொடுத்திடுன்னு சொன்னாக.

நானும் கல்யாணத்துக்கு வர்றவங்களைச் சொல்றாகன்னு வாங்கி வெச்சிகிட்டேன். ஒரு அரைமணி நேரத்தில ஐயா அறையில இருந்து ஒரே சத்தம். சாமான் செட்டெல்லாம் விழுந்த மாதிரி. ஐயா கத்தின மாதிரி.''

''நீ போய்ப் பார்த்தியா?''

''வந்து கதவைத் தட்டினேன். அம்மாதான் பேசினாக. ஐயாவுக்கு உடம்பு சரியில்லை. மருந்து கொடுத்திருக்கேன். இனிமே சத்தம் வரா துன்னு சொன்னாக - வாயை மூடிக்கொண்டு விம்மினார் மாரிச்சாமி. ஆறுமுகம் அவர் தோளைத்தொட்டான்.''

''அப்புறம் என்ன ஆச்சு அண்ணே?

கொஞ்ச நேரத்தில சத்தம் அடங்கிப்போச்சு. அம்மா வெளியே வந்து என்னைக் கூப்பிட்டாக. கையில இந்த பை இருந்தது'' என மஞ்சள் நிற துணிப்பையை காட்டினார்.

''என்ன சொன்னாக?

காலையில தேனு வருவா. அவகிட்ட இதை என் அன்பளிப்பா கொடுத் தின்னு சொன்னாக.''

''அழுது கொண்டிருந்த தேன்மொழி வெடுக்கென நிமிர்ந்தாள்.

என்ன?''

''எல்லாத்தையும் உரியவங்ககிட்ட சேர்த்திடு மாரி. கடைசிவரைக்கும் இந்த வீட்ல நீ இருக்கணும். இது உன் வீடு.பத்திரமா பார்த்துக்கோன்னு சொன்னாக.

பிறவு உள்ளே போய் கதவை சாத்திட்டு மாரி! நான் தூங்கப்போறேன். காலையில வந்து கதவைத் திறன்னு சொன்னாக.

நானும் முட்டாப்பய மாதிரி எதையும் யோசிச்சி பார்க்காம தலையாட்டிட்டு திண்ணைக்கு போயிட்டேன்.'' இப்படியெல்லாம் ஆகும்னு தெரிஞ்சா அம்மாவை மட்டுமாவது காப்பாத்தியிருப்பேன்.

என் தாயை தவறவிட்டுட்டேனே. நான் தவற விட்டுட்டேனே - என தலையில் அடித்துக் கொண்டு மாரிச்சாமி கதற ஊரே சரஸ்வதிக்காக அழுதது.

மதயானைபோல் கிடந்த ராஜதுரையை யாரும் எதிர்த்துப்பார்க்கவில்லை. மாரிச்சாமியின் கையால் தங்களது நிலப்பத்திரங்களை வாங்கியவர்கள் நன்றிப்பெருக்கோடு சரஸ்வதியின் காலைத்தொட்டு வணங்க, கடைசியாய் அந்தத்துணிப்பையோடு தேன்மொழியை நெருங்கினார்.

''யம்மா! தேனு!இது உனக்கு''

கண்ணீரோடு தலையாட்டி மறுத்தாள். வேண்டாம். எனக்கு எதுவும் வேண்டாம்.

''அம்மா உனக்குன்னு கொடுத்தது தாய். வேண்டாம்னு சொல்லாத. அது அம்மாவை அவமதிச்சமாதிரியாகிடும்-என்றதும் கைகள் நடுங்க அதை வாங்கிக் கொண்டாள்.

எபுள்ள தேனு! பையைத்திறந்து பாரு.''

''அச்சு காகிதத்தோட விலை ஏறிடிச்சினு தலைவர் கிட்ட சொன்னது தப்பா போச்சா... ஏன்?''
''அப்ப குற்றப்பத்திரிகையோட விலையை உயர்த்திடுவாங்களானு கேக்கிறார்''

-பர்வீன் யூனுஸ், குரோம்பேட்டை





ஒரு பெண் ஆர்வமாய் குரல்கொடுக்க, வெறுப்பாய் நோக்கினாள்.

''தெய்வமே வேரோடு சாய்ஞ்சிகிடக்கு. எனக்கு எதுக்கு இதெல்லாம்? இந்தா நீயே வெச்சிக்க.''

''அடி ஆத்தி! நான் என்ன ஆசைப்பட்டா கேட்டேன். அந்தம்மா ஏதாவது சேதி சொல்லி எழுதி வெச்சிருக்காங்னு பார்க்கத்தான் திறக்கச் சொன்னேன்.

''அந்தம்மாவுக்கு எழுதப்படிக்க தெரியாதில்ல?

வேற என்னவா இருக்கும்? கண்டிப்பா ஏதோ பொருள் இருக்கு. பை நிறைஞ்சிருக்கே?

தேன்மொழிக்குள் எதுவோ உறுத்தியது. நேற்று தன்னை அனுப்பி வைக்கும் போது சரசக்கா சொன்னாளே!

''நீ தைரியமா போ தேனு. ஆறுமுகம் தான் உன் புருஷன். முதல்ல இந்த அரளிக்காயை இப்படிக்கொடு. நீ இனிமே எதுக்கும் கலங்காதே. நாளையபொழுது உங்க எல்லாருக்கும் நல்லதாவே விடியும்.

உன் கஷ்டமெல்லாம் போயிடும். உன் தம்பி தங்கைகளை நீயே படிக்கவெச்சு ஆளாக்கு. நீங்க ரெண்டு பேரும் சந்தோஷமா நீண்டகாலம் வாழுவீங்க. நாளைக்கு உனக்கு பொறந்த வீட்டு சீரை நான் தருவேன்'' என்றாளே!

என்ன தந்திருப்பாள்? நெஞ்சம் பதற தன் கையிலிருந்த பையைப் பார்த்தாள்.

பையின் வாய் சணல்கயிறால் கட்டப்பட்டிருக்க, அதை அவிழ்த்து பையுள் பார்வை செலுத்தினாள்.

உள்ளே கட்டுகட்டாய் பணம் இருந்தது. கூடவே ஏராளமான நகைகள். அனைத்தும் சரசக்காவின் நகைகள்.

மீண்டும் கண்ணீர் பீறிட, சரசுவின் காலில் விழுந்தாள்.

''சரசக்கா! என்னை என் குடும்பத்தை வாழ வெக்க நீ தெய்வமாகிட்டியா! என் தெய்வமே! தெய்வமே'' தேன்மொழியின் கதறலைக் கண்டு ஊர்மொத்தமும் கதறியது.

ஏழைகளின் வயிற்றிலடித்து வாங்கிய நிலங்கள் அனைத்தும் அவர்களுக்கு திரும்பக் கிடைக்க உதவி, தேன்மொழியின் வாழ்க்கையும் மீட்டுக்கொடுத்த சரஸ்வதி அவ்வூர் மக்களின் தெய்வமாகிப்போனாள்.

## முற்றும்